The college as well as school students get long vacations during their curriculum. These periods can well be utilised towards promoting the welfare of the village folk. By this work the students not only do some valuable service to their brethren but also have practical lessons in human life which will be very useful to them in their future.

First of all the students can try to educate the villagers by conducting adult education classes. The villagers should be taught about the importance of sanitation also. The students should not hesitate to do menial work, such as cleaning the streets of all refuses and converting them into compost manures and such manual work as digging and cleansing of wells, excavation of ditches, white washing the houses etc. If financial help is available, stress should be laid on converting atleast some mud huts into masonry structures, provision of tiled roofing in lieu of palm leaves and free medical attendance just like the one provided by the Medical College students of Madras. Another important item of the work will be to co-operate with the villagers in laying out roads connecting these villages to the nearby towns, constructing tanks for storing up the rain water.

Lastly the civic consciousness should be cultivated in the villagers and their grievances represented to the government. The government also should come forward to provide the civic amenities such as electric supply, provision of adequate medical facilities and educational institutions and the like in the villages. All students may be compelled to serve in the villages for a prescribed duration, after their studies are over and before they are conferred with their degrees or diplomas.

If sufficient response is forthcoming from the government and the public sectors in this sphere, we can see wonderful villages in our country in the immediate future and the villagers will contribute their mite in building up a prosperous India on the Socialistic Pattern of Society.

Let us strive hard to follow the footsteps of the Father of the Nation and contribute for the happiness of the villagers by doing social service and enrich ourselves, as villages are our national assets.

S. VARALAKSHMI,
VI Form, G.

Who am I?

(*a*) As a whole I leap from the tree;
If you cut my tail I wear a cowl and pray;
But if you cut my head I become the magic which opens locked doors;
Oh! what could I be, being so strange!

(*b*) My first is the first of first,
My second and third are none;
My last is the first of last;

Who am I?

(*c*) My first two are mine own,
My second three are where mummy holds baby,
My third three are hidden under the earth,
But my whole is in Madras.

Who am I?

(*d*) With my first four I hit hard,
With my last four tell a tale,
But my poor middle is all alone,
Even if my whole is full of people,
Now let me bang a lore at you all,
To see if you can tell.

Who am I?

(*a*) Monkey.
(*b*) Fool.
(*c*) Mylapore.
(*d*) Bangalore.

R. Santha,
IV Form, B.

(*e*) I am a bird of four letters,
If my second letter is removed, I am an animal,
But if my first letter is dropped, I am a line.

Who am I?

(*f*) I am a large city of six letters.
If my last two letters are cut, I am deadly.

Who am I?

(*g*) I am a language of nine letters,
If you read me from last to first,
I am the same.

Who am I?

(*h*) I am very tall, I am very small in various forms I am seen,
I am like a man, I am like a form or maypole on the green;
I follow you, You follow me, but still we keep together,
Though seldom you, my form, can see in wet and gloomy weather.

Who am I?

(*e*) Crow.
(*f*) Bombay.
(*g*) Malayalam.
(*h*) Shadow

B. Vasanta,
IV Form, B.

"Twinkle, Twinkle, Golden Fish!"

Fisherman :—

Twinkle, twinkle, Golden fish,
How I wonder what you wish!
If you need a tasty fly,
I will send you, don't feel shy!
Down below the sea so deep
Tell me only where you creep.
I shall send the handline deep
Take the fly from where I keep.

Fish :—

Don't I know the trick you play!
I shall evade, and won't obey
I challenge, oh! Fisherman;
Send it how'ver deep you can.

Fisherman :—

Fish, oh Fish! how proud you are
To dare declare on us a war!
Twinkle, twinkle, what you are,
Blinking, blinking! here we are.

K. Bama,
V Form, A.

Tragedy of Nature

Just a few months ago, we read in the newspapers about the earth quake in Kutch. Many of us might have treated it as one of the passing matters since we do not know how the actual experience will be. We are aware that earthquakes are very common in Japan. Any such event is not therefore made much of there. In Japan, houses are built with very light materials and so the damage due to an earthquake will be very little; where as in India, the constructions are all with brick, mortar and cement and hence the extent of any damage will be considerable, both to property and to lives.

First of all let us see how an earth quake occurs. It is a known fact that our planet, the earth, was a ball of fire and after the lapse of millions of years it began to cool down and became fit for the existence of human beings. But still the interior of the earth is retaining its heat. The diameter of the earth is 7,900 miles. Leaving apart a few hundred miles near the surface the interior is yet said to be in a liquid form. And when this boils up, it begins to come up breaking through the surface, disturbing the place. When the liquid also flows out, it is called a volcanic eruption and if the disturbance is caused to the surface of the earth, then it is called an earthquake. When such a disturbance takes place, the earth will tremble and there may also occur large gaps in the earth.

The consequences of this event will be too terrible to think of. There will not be many people who have outlived a serious quake to tell us of their fearful experiences. Recently I saw a picture in which the actual scene has been filmed. An earth quake occurs at night. It begins with a rumbling noise, with the trembling of the earth. Buildings fall down on the streets; electric system goes out of order; people who have been frightened rush into the streets without knowing where to go; they madly run hither and thither, and some go under the falling buildings and some are swallowed up by the openings of the earth. A dam near the town gives way, and the water rising high, floods the town, taking in its course, trees, parts of buildings etc. The damage to life and property is terrible and the whole place is filled

with cries of men, women and children and the terrible noise of the buildings, till the shock ends.

More or less such should have been the experience during the recent event in Kutch. No place would have been safe for the people during the quake. The principal town affected was Anjar and our Prime Minister, Shri Jawaharlal Nehru also visited the place of attack to see the damage himself. No doubt our Government took all possible steps to help the affected people. We have also extended our mite to a large measure to those stricken people who have lost their all.

Nature which supplies all our needs, is also equally powerful in damaging. Nothing can be done to stop such events except to pray to the Almighty to help us, His Children.

K. M. JANAKI,
VI Form, E.

Seven Strange Nations

1. .. .. NATION. (Joining together).
2. .. .. NATION. (the crowning of a king).
3. .. .. NATION. (bringing into proper relation).
4. .. .. NATION. (power of thinking).
5. .. .. NATION. (obedience to elders and superiors).
6. .. .. NATION. (murder).
7. .. .. NATION. (making a thing clear).

(1) Combination.
(2) Coronation
(3) Co-ordination.
(4) Imagination.
(5) Subordination.
(6) Assassination.
(7) Explanation.

S. SUBBULAKSHMI,
VI Form, B.

Problematic Partner

Husband :—How long will you take for your 'make up'? It is already six o'clock and you must be knowing that the picture starts at 6-30.

Wife :—You always find fault with me. How many times have I told you with this mirror I cannot pull on any more. It is getting older everyday.

Husband :—But not as old as you *ARE.* Don't forget you brought it here on the day of your marriage. It is only twenty now—eighteen years younger than you.

Wife :—Do you want me to go to the picture with you or not?

Husband :—There's a dear, don't get angry. O queen of my dreams! you look far younger and brighter than that old stupid mirror. Come on. It is 6-10 now.

Wife : –You can't sleep in the night if you don't joke at my expense.

Husband:—Tell me honestly if there is any woman who does not want her age to be divided by two.

[They start for the picture. On the way a friend accosts them and the husband gets aside and the friends start conversing in whispers.]

Friend :—Oh! Good evening.

Wife :—Good evening. It is nice to see you after such a long time.

Friend :—[feeling the saree] seems to be new! Where did you buy it? It's wonderful. Must have cost a lot.

Wife :—Not much. Just hundred and twenty rupees.

Friend:—It is nothing for you. Your husband is drawing quite a big sum!

Wife :—Not so much as you think. He gets only four hundred and fifty a month.

Friend :—Alright. I must not detain you for long. Your husband is already sweating.

Wife :—My God! it is 6-20 now. Good bye, till we meet again.

[Husband joins the wife].

Husband :—I can't just help admiring you for your ready-made lies. The saree actually cost only sixty rupees if I am correct.

Wife :—Had I told her the truth do you know how cheap she will estimate me?

Husband :—What about my poor pay? May I know why it was trebled?

Wife :—That is very clever of you! Can't you understand such a simple thing as this? Do you want me to paint a poor picture of my dear husband?

Husband :—By the way, she seems very young and how do you say she was your classmate?

Wife :—She? Is young! Have you lost your sight? Even on the day of my marriage she was married for five years and now she must be at least five or six years older than I.

Husband :—I don't know why you women as a whole have passion for Mathematics, you divide your age by two, double the price of your sarees, treble the salaries of your husbands and add five more years to the age of your best friend.

Wife :—That is too much. What a poor estimation of women!

Husband :—As long as your knowledge of mathematics does not pinch my purse I am O.K.

Wife :—I will have it in my mind for a future date. But certainly not for to-day. Look! The bus is come. Let us get into it.

K. N. RAJALAKSHMI,
VI Form, D.

Test your Intelligence

1. Is there an English word which contains all the vowels?

2. A flying alphabet.

3. What is that which you possess but others use more than you.

4. Which is the smallest bridge in the world?

5. The three letters without which man cannot live.

6. What is the word which is the name of a bird and a nation?

7. stand / mis. } Find out the hidden words.
   C / ed.

8. 'EXIST'—Find the word within this word with the same meaning.

9. What makes a road broad?

10. Read forward—I am clever.
    Read backward—Electric cars.

11. Read forward—I mean to exist.
    Read backward—I am wicked.

12. Read forward—I am a part of a musical instrument.
    Read backward—I am an animal.

13. Read forward—I am a living creature.
    Read backward—The worshipped of all religions.

14. What is that which holds water although full of holes?

The following definitions all apply to 4 lettered words. If you arrange these under one another in the order indicated their initial letters spell the name of a country.

(*a*) Unit of lineal measurement.	Inch.	I
(*b*) Part of a human finger.	Nail.	N
(*c*) Toy.	Doll.	D
(*d*) Used in printing or writing.	Inks.	I
(*e*) Indian Test Cricketeer.	Apte.	A

K. Nirmala,
VI Form, A.

Answers

1. Unquestionably. 2. B(ee). 3. Your name. 4. The bridge of the nose. 5. Air. 6. Turkey. 7. Misunderstand, covered. 8. is. 9. 'B'. 10. SMART. 11. LIVE. 12. REED. 13. DOG. 14. SPONGE.

K. Ranganayaki & K. Bama,
V Form, A.

A Tale of Five Cities

1. The city that gives you shock.
2. The city that is fast.
3. The city that is wise.
4. The city that is truthful.
5. The city that is talkative.

(Answers in page 22).

G. Thangam,
V Form, G.

Where are you in everyday Life?

1. Who is commonly referred to as the 'Elder Statesman of India'?

2. What would happen if you do not insert a two anna coin while speaking through a telephone?

3. How do you distinguish a taxi from a private motor car?

4. How do you distinguish between an A.C. fan and D.C. fan?

5. By what current does the electric train runs, A.C. or D.C.?

6. What is the difference between a teacher and an engine driver with regard to "mind"?

7. Which is the "world famous" feature of the Madras City?

Answers :

1. Rajaji.

2. The line will be cut.

3, Taxies will have white number boards with black numbers whereas private cars have black boards and white numbers. Taxies also have metres.

4. In the A.C. fan the blades revolve together with the pot to which they are attached. In the D.C. fan the pot will not revolve but the central axis and the blades alone revolve.

5. A.C.

6. A teacher trains the mind and an engine driver minds the train.

7. The Marina Beach.

A Fun

Once upon a time there lived a man in a small village. He was a farmer named Govind. He worked in the fields day and night. He could not read and write well, but he knew a little.

One day, he had to go to a city nearby. He packed his things up and said to his wife that he would reach the city that day. If he wrote a letter in blue ink, it would mean that he was safe. If he wrote in red ink, it would mean he was in danger. So saying he left that place.

Some days later, there came a letter from Govind to his wife. When she saw that the letter was written in red ink, she fainted, because she thought that her husband was in danger.

The letter read as follows :

"I reached this place safely. Blue ink is not available in this place. So I write this letter in red ink. Don't be alarmed. "Govind".

S. Suseela,
IV Form, C.

Answers : *"A Tale of Five Cities"*

1. Electricity. 2. Velocity. 3. Sagacity. 4. Veracity. 5. Loquacity.

"The Time Honoured Capital"

Delhi is an ancient and a historical city. It is situated on the west bank of the river, Jamuna, in a narrow plain. The history of Delhi is in fact the history of India. On the twelfth December 1911, at the time of the Royal Durbar, His Imperial Majesty, King George V announced Delhi " The Imperial Capital " and transferred the seat of the Government of India from Calcutta to Delhi.

On the 15th of August 1947, the Era of Independence recovered Delhi to its ancient glory and prestige as the " Capital of Free India." All the important countries are represented there.

The area of Delhi is about 578 square miles including the territory surrounding it. It is a state consisting about three hundred and fifteen villages and eight cities. The population of the state increases in proportion to its growing importance and is now about 17.4 lakhs.

The earliest history of Delhi appears in the Mahabharatha when it was the capital of the Pandava Kingdom. Then it was known as Indraprastha. Now the ruined Old Fort or Purana Qila stands, as the tradition goes, on the site of the ancient city of Indraprastha. Prithvi Raj, the reputed Rajput King of India ruled over Delhi. Prithviraj was defeated in 1192 A. D. by Mohammed of Ghore, who made Qutb-Ud-Din his successor. Qutb-Ud-Din refashioned the city and named it as Kutab. This name did not stand for long. Kutb Minar stands as a relic of this name.

The Red Fort and the Juma Masjid were built at Delhi between 1633—1658 A. D. by the Master Builder Emperor, Shah Jahan. New Delhi is a fine specimen of the royal splendour. It is the work of the British architects and engineers.

Delhi has its own University. There are a number of hospitals and dispensaries maintained by the government as well as by the local bodies. The climate of Delhi is very healthy.

Delhi is a famous industrial centre. The First and Second World Wars have developed several chief industries in Delhi, like iron foundries and cloth and flour mills. Carving on ivory and woods, gold and silver embroidery are the chief industries in Delhi.

The Pearl Mosque, the Red Fort, the Juma Majid, Gandhiji's Samadhi, Ashoka's Pillars at Ferozhah Kotla, the Purana Qila, Humayun's Tomb, Safdar Jang's Tomb, Qutb Minar, the Iron Pillar, Shri Lakshmi Narayan Temple, the Rashtrapathi Bhavan, the Central Secretariat, the Parliament House, the National Physical Laboratory, the Broad-casting House, the Jantar Mantar, the Cannaught circus and several others are the important places of interest in Delhi.

Delhi is an important railway junction. It it the Head-quarters of the The Eastern Railway. It is also the terminus of Indian Air Service. The two modern air ports of Wellingdon and Palam are big centres of internal and international air traffic.

P. RAJESWARI,
V Form, E.

Poets' Corner

Each of the words in the list given below is the name of a famous poet. But the latter halves of the names are missing. Find them out with the help of the meanings of the missing parts given alongside.

1. WORDS : Value.
2. MIL : Equivalent to twenty hundred weights.
3. SOU : Plural of 'he' or 'she'.
4. CAMP : Something which emits a clear musical sound when struck.
5. COLE : A long narrow range of hills or mountains.
6. COW : Each.
7. MASE : Large cultivated area.

Answers

1. Wordsworth.
2. Milton.
3. Southey.
4. Campbell.
5. Coleridge.
6. Cowper.
7. Masefield.

G. THANGAM,
V Form, G.

Fun & Frolic

"Two men were quarrelling with each other.

"You are a fool !" one of them shouted.

"You are drunk !" rebuked the other.

"Yes," admitted the first. "But I will be alright tomorrow. But you'll always be a fool !".

* * *

A little girl was looking at the photographs of her parents' wedding in an Album. Her father described the ceremony. Suddenly the girl said, "oh ! is that when you got Mummy to come and work for us ? "

D. LALITHA,
VI Form, A.

IT PAYS TO

PURCHASE
YOUR SPORTS GEAR
AT

METRO SPORTS

Makers of High Class Sports Goods

P. B. No. 356

3/30, MOUNT ROAD, MADRAS-2.



LATE SRI. S. RAMASWAMI NAIDU,
one of our esteemed members of the Governing Body.

FROM OUR CHILDREN'S PEN

"வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணைசெய்யும் ஒலியிலிருப்பாள்"

By M. S. Kausalya,
Form V-B.

ஆசிய ஜோதி.

தலைவியும் தோழியும்

By K. Lalitha,
III Form D.

எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவிருள்



By
A CHOODAMANI
V FORM E

145435

அன்பு

இவ்வுலகின் கண் உள்ள பொருட்களை இரு பிரிவாக ஆன்றோர் பகுத்துள்ளனர். புலன்கட்குப் பொருளாகும் பொருட்கள் பருமைப் பொருட்களாம். புலன்கட்குப் பொருளாகாது தன்னையுடைய பருப் பொருள் வாயிலாக உணரக் கிடப்பவை நுண்மைப் பொருட்களாம். அறம், அன்பு, நீதி ஆகியவை இரண்டாம் வர்க்கத்தனவாம். இவற்றுள் அன்பு குறித்துச் சிந்திப்போம்.

அன்புணர்வு நுண்ணியது. இது ஊனப் புலன்கட்குப் பொருளாகாது உணர்விலே உறுத்துகின்றது; தெய்வீகத் தன்மையது; ஒவ்வோர் உயிரிலும் அணுவிலும் அணுவாய் நீக்கமற விரவி நிற்கின்றது. உள்ளத்தின் அடித்தளத்தே கிடக்கும் இவ்வுணர்வு ஊற்றாகப் பொங்குகையில்தான் அதனால் உயிர்கள் பயனடைகின்றன. அகம்புறச் சங்கமத்திலே ஏற்படும் அன்புணர்வு உயிர்கட்கு உரம் தருகின்றது. இவ்வுணர்வு இதயத்தே எழாவிடின் நாம் மனிதப் பண்புகளைப் பெற்று விட்டதாகவோ, முழுமனிதத் தன்மை யடைந்து விட்டதாகவோ கருதலாகாது. நுண்ணிய அன்பு அகத்தே எழின், குற்றம் காணும் குறுகிய மனப்பாங்கு நீங்கும். ஆயுதங்களால் அடைய வொண்ணாததையும் இவ்வன்பு அடைந்து காட்டி மறக்கவியலா மணம் வீசுகின்றது. பரமனும் பரிசுத்த அன்பிற்குப் பணிவான் எனில் பற்றலர் பணிவது ஆச்சரியமல்லவே! மழலை மாறா மதலைகளும், விலங்கினங்களும் கூட அன்பிற்கு வயப்படுகின்றன.

இதய மலரிலே அன்புத்தேன் பெருகினால் ஆண்டு தயை முதலிய நற்குணங்கள் தோன்றி அதனுக்கு மணம் தருகின்றன. நெஞ்சிலே நேர்மையும், கருத்திலே கனிவும், செயலிலே ஆற்றலும், பேச்சிலே பண்பும் மலிகின்றன. உள்ளம் அன்பு ஊற்றிலே திளைத்தால் தன்னலத்தீ அணைந்து பிறர் நலம் பேணும் பண்பு சிறக்கின்றது. அகத்தே ஆட்சி புரியும் அசுத்தங்கள் அன்புக் கனலிலே கருக, தியாகச்சுடர் தழைக்கின்றது. அழியா அன்பினில் ஆண்டவன் ஆலயங் கொள்வான். அன்பு உணர்வில் அமைதி அரசிருக்கும். துன்பம் நீங்கி இன்பமேற்படும். வாழ்வுக் கடலிலே எதிர்ப்பாம் எவ்வங்களை வென்று இன்பத் தீவைச் சேர அன்பு தோணியாகி எச்செயலுக்கும் ஏற்றம் தருகின்றது. எஃகு நெஞ்சத்தவரையும் பணியச்செய்வது மஃதே.

இத்தகைய அன்பு இடத்திற்கேற்ப வேறுபடுகின்றது. ஒத்த வயதுடைய இருவரின் உள்ளங்களைப் பிணைக்குங்கால் நட்பு எனப்படுகின்றது. சுற்றத்தவரிடம் ஏற்படுங்கால் பாசம் எனப்படுகிறது. ஆசானிடம் தோன்றினால் குரு பக்தியாகிறது. பரமனிடம் ஏற்படுங்கால் பக்தி எனப்படுகின்றது. அகத்தே அன்பு எழின் ஆண்டு வெல்ல முடியாத உறுதி ஏற்படுகின்றது.

இனி, பரிசுத்தமாய அன்பிற்கு இறைவன் அடிமையாதல் காண்போம். ஆண்டாளின் அன்பு மலர் ஏற்ற கார்முகில் வண்ணன் அவள் சூடிய மலரைத் தான் சூடி மகிழ்ந்தான். இறையன்பு மாறா இராமலிங்கவடிகளின் அன்புத்தளை பூண்ட குன்றுதோறாடுங் குமரன் குருவாய் வந்தான். பாணபத்திரனின் பவித்திர அன்பினை ஏற்றமையின் திருமாலும் தரிசியாத் திவ்வியத் திருவடிகள் தரணியிலே நடக்க, பால் வெண்ணீறு பளிங்கெனத் திகழும் மேனியிலே வேர்வை பெருக, பாற்பிறை சூடிய பரமன் தலையிலே விறகினை ஏந்தி முதியோனாய் வந்து கதி தந்தனன். தண்மதி சூடிய நீலகண்டன் தாயுமாகித் தயை புரிந்ததவும் அன்பிற்கு அடிப்பட்டமையாலன்றோ? மற்றும் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டதும் பரமன் முதிய பெண்ணொருத்தியின் அன்பு வயப்பட்டமையாலன்றோ? மற்றும் பரமனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் அவ்வாறே நீலமேக வண்ணன் குசேலர் கொடுத்த அவலிலே ஆவல் காட்டியதும் அன்பினால் தான.

இனி, அன்பிலே ஆண்டவன் உறைவதைக் காண்போம். புழுக்கறையிலே அப்பர் யாழின்

இன்னொலியையும், வண்ணமலர் சூழ் வாவியின் வசந்தத்தினையும், முழுமதியின் முறுவலையும், தவழ்ந்து வரும் தென்றலின் தண்மையையும், வசந்தகால வனப்பையும் கண்டான். அவரது அன்பிலே ஆண்டவன் நீக்கமற விராவி நின்றதாலன்றோ அவை நிகழ்ந்தன? அமரரும் அடையவொண்ணுக் கயிலைக்கிரி செல்ல வெண்ணி இன்னல் பல உற்றுக் குறிக்கோளில் வெற்றியடைந்தார் நாவின் செல்வர். நீலமணி மிடற்று நிர்மலன் அவரது அன்பிலே ஐக்கியமானமையாலன்றோ அவ்வரிய காட்சி அவருக்குக் கிடைத்தது.

இனி, இக்காலத்திலும் அன்பு ஆட்சி புரிதல் காண்போம். அஹிம்சையின் அன்புச் சுடர் கொண்டு அடிமையிருள் அகற்றிய காந்தியடிகள் ஆதிக்கவெறி கொண்ட ஆங்கிலேயரின் ஆயுத பலத்தையும் அதனாலேயே வென்றார். அதன் பயனாக அவர் மஹாத்மாவானார். அன்பு கொண்டு ஆட்சி செய்த அசோகரின் அறச்சக்கரமே இன்று நாணயத்திலே உள்ளதாகும்.

அன்புத் தீபங்கொண்டு ஞானஒளி பரப்பிய புத்தர் இன்று மக்கள் மனத்தே மறக்கவியலா மணம் வீசித் திகழ்கின்றார். இன்னும் பல சான்றுகளும் உள.

பொதுவாகக் கூறப் புகுந்தால், அன்பு பவித்திரமாயது; எச்செயலையும் செய்ய வல்லது; குன்றாப் புகழுடையது. நமது புலன்கள் அன்பிலே திளைக்கையில் ஏற்படும் அமிழ்தம் உடல், உள்ளம் இரண்டினுக்கும் உரந்தரவல்லது. ஒரு தீபம் மற்றொன்றினுக்கு ஒளி ஈதல் போன்று ஓர் அன்பு நெஞ்சம் மற்றொன்றிலும் தன் அன்பைப் பிரதிபலிக்கின்றது. மறநெறி நீக்கி அறத்திற்கு வித்தாகிப் பேரின்பமும் அளிக்க வல்லது அன்பு.

> "அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை"

ஜி. சுகுமாரி,
ஆறும் படிவம், 'ஈ' பிரிவு.

கிருஷ்ண ஜயந்தி

கிருஷ்ண ஜயந்தி ஓர் நன்னாள்! ஒருவர் பிறந்த நாள்! யாருடைய பிறந்த நாள் தெரியுமா? கண்ணனுடையது தான்! கண்ணனைப்பற்றி நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள்! அவனுடைய பெருமைகளிலும் சிலவற்றை அறிந்திருப்பீர்கள்! கண்ணனுடைய பெருமை இவ்வளவுதான் என்று யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. முக்காலு முணர்ந்த முனிவர்களாலேயே முடியாது என்றால், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினரான நம்மால் எவ்வாறு கூற முடியும்?

• •

ஒரு சமயம் பகவான் நினைத்தார்! 'நாம் ஒருவராலும் அறிய முடியாமல் மிகவும் உயர்ந்த உலகத்தின் கண் இருக்கிறோம்! இருமருங்கிலும் பழ மறைகள் முழங்குகின்றன! நாம் நுகரும் இன்பமோ அழிவற்றது! யாராலும் அடைய முடியாதது. நம் பெருமையை கற்றுத் தெளிந்த பெரியோர்கள்தான் அறிகிறார்கள்! எல்லோரும் நம் பெருமையை உணர என் செய்வது?' என்று எண்ணினான்.

'பூமியில் பலவிதமாக அவதரித்தோம்! எல்லோருடனும் கலந்து பழகமுடியாமல் போயிற்று! ராமனாக அவதரித்தேன். அரசர்களின் முறையைச் சேர அவ்வணியிலேயே நின்றுவிட்டேன்! இனி எல்லோரும் நம் உண்மையை அறியும் வகையில் ஒரு குலத்தில் அவதரிக்கவேண்டும். மிருகங்களுக்குள் மிகவும் பரிசுத்தமானவை பசுக்கள்! அவை சாதுவான மிருகங்கள். மக்களுக்கு மிகவும் உபயோகமானவை!

எனவே அவைகளைக் காக்கவேண்டும்' என உறுதி கொண்டான்.

பூமியில் நாளுக்கு நாள் அதர்மம் தலை விரித்து ஆடத் தொடங்கியது! மன்னர்கள் மண்ணாசை கொண்டனர்! பாமரர்கள் பல வழிகளில் பாதிக்கப்பட்டனர்! வஞ்சகர் களுக்கு வகை ஏற்பட்டது! மக்கள் மனம் கலங்கினர்! சாதுக்களின் மனம் சலிக்கத் தொடங்கின! எல்லா உயிர்களும் ஏக்க மடைந்தன! மக்கள் அந்நாளில் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித் தனர்! மண்மகளும் மனமுடைந்தாள்! திருமாலின் திருவடி பணிந்தாள்! தமது குறையைத் தவிர்க்க வேண்டினாள்! அதர் மத்தை நினைத்து அயர்ந்தாள்! பன்முறை பரமனைப் பாடித் துதித்தாள்! செவி யுற்றான் செங்கணான்! 'யாம் பூமியில் பிறந்து நும் துயரைத்தீர்ப்போம் செல்க' என்று விடையளித்தான்! எங்கும் வெற்றி முரசு; அமரர்கள் அகமகிழ்ந்தனர்!

திருமால் புவியில் தோன்றப்போகிறார்! எங்கும் மங்கல அறிகுறிகள்! ஒருநாள், பரிதியும் மறைந்தது! எங்கும் இருள் கவ்வியது! மக்களின் மனத்தில் குடிகொண் டிருக்கும் மருள் இவ்வளவுதான் என்று தன்னுருவத்தால் காண்பித்தது இருள்! 'சோ' வென்ற மழை! அடை மழை! வெளியே தலைகாட்ட முடியாது! நள்ளிரவு! இடைச்சேரியில் இருக்க இடம் ஏது? இடையர்கள் கடவுளரை இறைஞ்சி நின்றனர்! வசுதேவர் என்பவர் கஞ்சனுக்கு அண்டிய உறவினர்! வசுதேவரின் மனைவி தேவகி! இருவரையும் சிறையில் அடைத் திருந்தான் கஞ்சன்! பத்துத் திங்கள் நிறைந்த கருவினைக்கொண்ட திருவயிறுடை யாள் தேவகி!

அந்தோ! அவள் என்றும் கண்டது மில்லை! கேட்டதுமில்லை! மனத்தினால் நினைத்ததுமில்லை! ரோகிணி நன்னாள் கூடிய ஆவணித் திங்களில் ஒரு குழந் தையை ஈன்றாள் தேவகி! அக் குழந் தை நான்கு கைகளோடு அவதரித்தது! தந்தை தாயாரின் வேண்டுகோளுக்கிணங்கி இரண்டு கைகளுடன் காட்சியளித்தது! அக் குழந்தைதான் கண்ணன்!

கண்டோர் களிப்புறவே கண்ணன் அவ தரித்தான்! தாயைக் குடல் விளக்கம் செய்தான்! ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்தான்! தன் வலிமை பெருமைகளை மெல்ல உணர்த்த ஆரம்பித்தான்! யசோதையின் மடியில் படுத்திருந்தான்! அன்னை நீராட்டினாள்! கண்ணன் வாயைத்திறக்கிறான்! வைய மேழும் கண்டாள் பிள்ளை வாயுளே! ஆயர் புத்திரனல்லன்! அருந்தெய்வம் என்று உணர்ந்தனர் ஆய்ச்சியர்! 'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே' என்று ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளு கின்றனர்!

கண்ணன் வெறுங் கண்ணனல்லன்! மாயக் கண்ணன்! பொன்றச் சகடமுதைத்தான்! அடங்காச் சினங்கொண்டு பூதனையின் ஆரு யிர் உண்டான்! வார்குழல் மடவார் வைத்துச் சென்ற வெண்ணெயை வாரி விழுங்கினான்! ஆய்ச்சியர் அசோதையிடம் கண்ணனைப்பற்றி முறையிட்டனர்! அசோதை கண்ணனைக் கடிந்து கொண் டாள்! ஓர் நெடுங்கயிற்றால் உரலோடு கட்டி விட்டாள்! கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டான். பொத்த உரலோடு பொதிந்து கிடந்தான்! அதையும் இழுத்துச் சென் றான்! மருத மரங்களை முறித்துச் சாய்த் தான்! ஆனிரை மேய்த்தான்! கானகம் சென்றான்! வேய்ங்குழலூதினான்! புள்ளின் வாய் கீண்டான்! கானக மாமடுவில் குதித் தான்! நஞ்சுமிழ் நாகத்தின்மேல் பாய்ந்தான்! காளியனுச்சியிலே தூய நடம் புரிந்தான்! கன்று குணிலா எறிந்தான்! கல்லெடுத்துக் கல்மாரி காத்தான்! ஓரானையின் கொம் பொசித்தான்! வஞ்சக்கஞ்சனை மாய்த்தான்! அரக்கரை அழித்தான். ஆயர் களித்தனர்! ஆனிரையும் அயர்வு நீங்கின! வானவர் பூ மாரி பொழிந்தனர்!

மாதம் மும்மாரி பெய்யத் தொடங்கின! புற்பூண்டுகள் நிறைந்து எங்கும் பச்சைப் பசே லென்ற காட்சி! இயற்கை எழிலில்

எண்ணற்ற மனம் தாவிக்குதித்து விளையாடுகின்றன! மக்கள் துன்பமின்றி இன்பமாக வாழ்ந்தனர்! செல்வம் கொழித்திருப்பதால் இரப்போருமில்லையாதலால் ஈவோருமில்லை! கண்ணனையே தேடியோடின மக்களின் கண்கள்! கண்ணன் அகப்படுவானா! செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் பல இருக்கின்றனவே! பஞ்சவர் தூதனாய்ச் சென்றான்! பாரதப் போர் செய்தான்! பார்த்தனுக்குத் தேரோட்டினான்! ஐவரையும் அழியா வண்ணம் அமர்க்களத்திலே காத்தான்! அவ்வரங்கிலே அழகிய கீதையை அருளிச் செய்தான்! மக்கள் எல்லோரும் கண்ணனைத் தங்களுக்குள் ஒருவனாகவே கருதினார்கள்! அருச்சுனன் கடைசிவரை அவ்வாறுதான் எண்ணினான்! கண்ணனைக் குறித்து பல கட்டளைகளை இடுகிறான்! ஆயனே! ஆயர் குலக் கொழுந்தே! ஆயர் கோமானே! கண்ணா! வாசுதேவா! கோவிந்தா! என்றெல்லாம் மக்கள் கண்ணனை அழைக்கிறார்கள்.

இதை எல்லாம் மறைவாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாள் ஆண்டாள்! மனம் பதறுகிறாள்! உன்தன்னைச் சிறு பேரழைத்தனவும் சீறியருளாதே! நாளை தொட்டுக் கன்றின்பின் போகேல்' என்று கண்ணனை வேண்டுகிறாள்!

மீரா கண்ணனை நினைக்காத நாள் உண்டா? ஆண்டாள்தான் ஆயனை நினைக்காத நாள் உண்டா? நாமும்தான் ஆண்டாளை நினைக்காத நாள் உண்டோ! பல துறையில் நாம் கண்ணனை நினைக்க இடமுண்டு! குசேலரிடத்தில் கண்ணனுக்கு அளவுகடந்த அன்பு உண்டு என்பது நமக்குத் தெரிந்ததுதான்! அந்தப் பக்தரின் பெயரால் நம் பள்ளியில் ஒரு சங்கமும் இருக்கிறது! இச்சங்கத்தின் தொடர்பால் நாம் கண்ணனை என்றென்றும் நினைக்க வழிஏற்பட்டிருக்கிறது!

ஒவ்வோராண்டும் ஆண்டாள் நாடகம் நடிக்கிறோம்! ஆண்டாள் பெண்ணுலகிற்கே புகழ்தேடித் தந்தவள்! அவளை வழிகாட்டியாகக் கொண்ட நாம் கண்ணனை எவ்வாறு மறக்கமுடியும்?

நமக்காகத்தான் கண்ணன் 'பார்த்தசாரதியாய்' நம் அருகிலேயே வீற்றிருக்கிறான்! அவனுடைய அருளால்தான் நம் பள்ளி வளர்மதிபோல் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்துகொண்டே வருகிறது! 'பார்த்தசாரதி' நமக்காகத்தான் நம் பள்ளியின் கொடியில் மிளிர்கிறான்! கண்ணன் கழலிணை நண்ணுமின்! கண்ணனருள் திண்ணம்! நாம் எவ்வண்ணம் சிந்திக்கிறோமோ அவ்வண்ணமாழியானும்!

ஜெய் ஹிந்த்

S. ஆனந்தா,
ஐந்தாம் படிவம், 'ஈ' பிரிவு.

நல்ல மனைவி

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பா கண்டத்திலுள்ள ஒரு சிற்றூரில் ஒரு குடியானவன் வசித்து வந்தான். அவனுடைய மனைவி அறிவிற் சிறந்தவளாயும், கற்குண நற்செயல்களைக் கொண்டவளாயும் இருந்தாள். கணவன் குறிப்பறிந்து செயலாற்றும் அக்காரிகை 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்னும் கருத்துக்கிணங்க கணவன்மீது மிகுந்த அன்பும், பற்றும், பக்தியும் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் குடியானவன் தன்னிடமுள்ள ஓர் சிறந்த குதிரையை விற்று அதைக்காட்டிலும் உபயோகமுள்ள வேறோர் பொருளை வாங்கத் தீர்மானித்தான். அவன் மனைவியும் அதற்குச் சம்மதித்தாள். சந்தை கூடும்

நாளில் குடியானவன் தன் குதிரையைச் சந்தைக்கு ஓட்டிச் சென்றுகொண்டிருந்தான். வழியில் எதிர்ப்பட்ட ஓர் குடியானவன் தன்னிடமுள்ள பசுவை விற்று ஓர் குதிரை வாங்கப் போவதாகத் தெரிவித்தான். உடனே குடியானவனின் மனதில் "நாம் பசுவை வாங்கினால் சில வருடங்களில் பல கன்றுக்குட்டி கிடைக்கும். அக்கன்றுக் குட்டிகளே பசுக்களாகவும் மாறலாம். மேலும் பசுவின் பால் விற்று வரும் லாபத்தைக் கொண்டு மேலும் அதிக பசுக்களை வாங்கலாம். வெகுவிரைவில் நம்மிடம் ஒரு பண்ணையே சேர்ந்துவிடுவதுமன்றி மிக்க ஊதியமும் கிடைக்கும்" என்ற எண்ணம் தோன்றிற்று. உடனே அவன் தன்னுடைய கருத்தை அவனிடம் தெரிவித்துக் குதிரையை அவனுக்கு அளித்துவிட்டுப் பசுவைப் பெற்றுக்கொண்டான்.

திரும்பி சிறிது தூரம் சென்றதும் ஓர் ஆட்டைச் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு ஒருவன் சென்றுகொண்டிருந்தான். அவன் அவ்வாட்டை விற்று ஓர் பசு வாங்கப் போவதை அறிந்ததும் குடியானவன் 'ஆட்டை வாங்கிக்கொண்டால் குறைந்தது ஓர் ஆண்டில் மூன்று நான்கு ஆட்டுக்குட்டிகள் கிடைக்கும். நம் பண்ணை வெகுவிரைவில் பெருகுவதுடன் நமக்குப் பெருத்த லாபமும் கிடைக்கும்' என்று எண்ணி அவனிடமிருந்து ஆட்டைப் பெற்றுக்கொண்டு பசுவை அவனுக்கு அளித்து விட்டான்.

மேலும் சிறிது தூரம் சென்றபின் ஓர் பெரிய வாத்தை ஒருவன் சந்தைக்குக் கொண்டு செல்வதைக் கண்டான். உடனே அவன் மனதில் 'நாம் இவனிடம் ஆட்டைக் கொடுத்து விட்டு வாத்து வாங்கிக் கொண்டோமாயின் தினமும் ஓர் முட்டை கிடைக்கும். அவற்றைக் கொண்டு மேலும் வாத்துக்களை உண்டாக்கலாம். வெகு விரைவில் நம்மிடம் எண்ணற்ற வாத்துகள் சேர்ந்துவிடும்' என்ற எண்ணம் தோன்ற, அதனை அந்த ஆளிடம் தெரிவித்து ஆட்டை மாற்றி வாத்தைப் பெற்றுக் கொண்டான்.

சிறிது தூரம் சென்றவுடனேயே ஒருவன் சிரமப்பட்டுத் தன் தலையில் ஓர் மூட்டையைச் சுமந்துகொண்டு சந்தைக்குச் செல்வதைக் கண்டான். விசாரித்ததில் கொஞ்சம் அழுகிய உருளைக்கிழங்குகளின் மூட்டை அது எனத் தெரிய வந்தது. உடனே குடியானவன் 'நாம் இந்நேரம் பெற்ற பொருட்களைக் கொண்டு ஊதியம் பெறச் சிறிது நேரம் ஆகும். ஆனால் இம் மூட்டையை வாங்கிக் கொண்டோமாயின் நாளைக்கே கடைத்தெருவுக்குக் கொண்டு சென்று இவற்றை விற்று ஊதியம் பெறலாம்' என்று நினைத்தான். ஆனால் வாத்தைப் பெற்றுக் கொண்டு மூட்டையைக் கொடுக்க அவன் சம்மதிப்பானோ இல்லையோ என்ற ஐயம் எழ அவனைக் கேட்டான். அவன் உடனே மகிழ்ச்சியுடன் சம்மதித்ததைக் கண்டு அவன் ஏமாந்து விட்டதாக நினைத்து மூட்டையைப் பெற்றுக்கொண்டு வாத்தினை அவனுக்குக் கொடுத்தான்.

குடியானவன் மிக்க மகிழ்ச்சியுடன் சிறிது தூரம் சென்றான். அதற்குள் எதிரில் வந்த அவனுடைய ஆருயிர் நண்பர் இருவர் குடியானவன் தன் தலையில் அவ்வளவு பாரத்தைச் சுமந்துகொண்டு வருவதுமன்றி அவ்வளவு மகிழ்ச்சியுடன் வருவதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று எண்ணி அவனை விசாரித்தனர்.

குடியானவன் தான் அம்மூட்டையைப் பெற்ற முழுவரலாற்றையும் கூறினான். இதனைச் செவியுற்ற நண்பர் இடி இடி என்று சிரித்தனர். பின்னர் ஒருவன் குடியானவனிடம் அவன் வீட்டிற்குச்சென்று தன் மனைவியிடம் செய்தியைத் தெரிவித்தவுடன், அவன் மனைவி கையில் துடைப்பக்கட்டையை ஏந்திக்கொண்டுதான் பதிலளிப்பாள் எனக் கூறினான். குடியானவன், தன் மனைவியின் சிறப்பியல்புகளையெல்லாம் எடுத்துக் கூறி அவள் ஒருநாளும் அவ்வாறு செய்யமாட்டாள் என்றும் மாறாக அவனை உபசரிப்பாள் என்றும் உறுதி கூறினான். அதனைச் செவியுற்ற மற்றொருவன் தானும் அவரொடு வருவதாகவும், குடியானவனின் மனைவி சண்டை போடவில்லையாயின் தன்னிடமுள்ள பொற்காசுகள் நிறைந்த பையை அவனுக்கு அளித்துவிடுவதாகவும், கூறி

னான். அவள் சண்டை போட்டாளானால் குடியானவன் அவனுக்கு ஒரு பைநிறையப் பொற்காசுகளை அளிக்க வேண்டும் என்றும் கூறினான். குடியானவனும் அதற்குச் சம்மதித்தான்.

நண்பர் மூவரும் குடியானவனின் வீட்டை அடைந்தனர். குடியானவனின் மனைவி மூவரையும் இனிது வரவேற்று உபசரித்ததுடன் தன் கணவன் அவ்வளவு நேரம் அலைந்து களைப்புற்று வந்ததற்கு அவனை அன்புடன் கடிந்து கொண்டாள். உடனே நண்பர் இருவரும் அவளுக்குக் குடியானவனின் செயலைப்பற்றி நன்கு விவரித்துக்கூறினர். ஆனால் அவள் அதைப் பற்றிச் சிரத்தையோ, கவலையோ கொள்ளவில்லை. அவள் பதிலுக்கு ஒரு புன்னகை புரிந்தாள். சிறிதும் கோபமின்றி இனிய முகத்துடன் குடியானவனை நோக்கி 'தாங்கள் சென்று இளைப்பாறுங்கள். நான் இவர்களைக் கவனித்துக்கொள்கிறேன்' என்று கூறினாள். அதனைச் செவியுற்ற நண்பர் மூவரும் அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாதவர்களாய் குடியானவனிடம் 'உனக்கு இம்மாதிரியான ஓர் சிறந்த மனைவி கிடைத்தது உன்னுடைய நல்வினைப் பயனே' என்று கூறி அவனிடம் பொற்காசுகள் நிறைந்த பையைக் கொடுத்துவிட்டு அப்பெண்மணியின் பதிபக்தியைப் புகழ்ந்து கொண்டே வெளியேறினர்.

தன் மனைவியின் அன்புச் செயலையும், தன்னுடைய அறிவில்லாச் செயலையும் பற்றி நன்கு யோசித்து உண்மையை உணர்ந்த குடியானவன் நன்றாகக் கற்று அறிவுள்ளவனாக மாறினான்.

Z. பேகம்,
ஆறும் படிவம், 'உ' பிரிவு.

சங்கீதத்தின் பெருமை

ஆயகலைகள் அறுபத்து நான்கினும் மிகச் சிறந்தது சங்கீதம். நுட்பக்கலைகளில் மற்றவைகளான சிற்பம், ஓவியம், நாட்டியம் முதலியவை மனிதன் மட்டுமே உணர்ந்து ரஸிக்கக்கூடியவை. இசையோவெனில் சகல ஜீவராசிகளும், மரம் செடி கொடிகளும், மற்றும் உலக இன்பத்தைக் காணமுடியாத குருடரும் கேட்டு அனுபவிக்கக் கூடிய அற்புதக் கலையாகும். பண்டிதர் முதல் பாமரர்வரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஸங்கீதத்தை அனுபவித்து மகிழ்கிறார்கள். ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு, நடவுப்பாட்டு, தெம்மாங்கு எனப் பாட்டாளி மக்கள் தம் களைப்பை மாற்றவும், மனதிற்கு உற்சாகமும், வேலையில் சுறுசுறுப்பும் ஏற்படவேண்டுமென்பதற்காகவும் பாடுகின்றனர்.

பண்டைக்காலத்தில் அன்பு, பக்தி, காதல், வீரம் போன்ற நவரஸங்களையும் ஸங்கீத மூலமாகவே வழங்கி வந்திருப்பதை நாம் கவிதைகளின் வாயிலாகவும், நம் பெரியோர்களான ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலானவர்களுடைய பக்திப் பாடல்களாலும் நன்கு அறிகிறோம். ஸங்கீதத்தைக் கேட்கும் போழ்து நம் துயரங்களை மறந்து அப்போதைக்காவது ஆனந்த மடைகிறோம். ஸங்கீதம் கேட்கும்போது நோயுற்றிருப்போரும் ஒருவிதத்தென்பை அடைகின்றனர். ஒருவன் தன்னை மறந்து பாடும்போது நாத வெள்ளத்தில் மூழ்கித் தன்னையும், சுற்றுப்புறத்தையும் சூழ்நிலையையும் ..என் உலகையே மறந்து அதில் லயித்து விடுகிறான்; பாட்டின் அதிதேவதையுடன் கலந்து விடுகிறான். இப்படி இறைவனுடன் இரண்டறக் கலப்பதே பேரின்பமாகும். இராகங்களின் ஸ்வர சேர்க்கைகளில் மனம் ஒன்றி அதற்கு மெருகிட மெருகிட இதயம் சுத்தமாகிப் பரிசுத்தமான நாதப்ரம்மத்தைக் காண்கிறது.

ஆன்மீகமாக நோக்குங்கால் உலக வியாபாரங்களை மறப்பித்து மறுமையின் உண்மையினைத் தெளிவு படுத்துகிறது. பக்தி உணர்ச்சியொடு கூடிய கீர்த்தனங்களையும் பஜனைகளையும் திரும்பத்திரும்பப் பாடினால் நம்மையறியாமல் நம் உளத்தில் பக்தியின் ஊற்றுச் சுரக்கும். நம் கர்நாடக ஸங்கீத ஆசிரியர்களான ஸ்ரீ தியாகையர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், துளஸிதாஸர், புரந்தரதாஸர், ஜயதேவர் முதலியோர் ஸங்கீதத்தால் கடவுளை நேரிற் கண்டு பெருமையுற்று முடிவில் பேரின்ப வீட்டைப் பெற்றனர்.

நம் முன்னோர் கடவுளைக் கண்வளரச் செய்யவும், துயிலுணர்த்தவும் ஸங்கீதத்தையே மேற்கொண்டுள்ளார். நம் தென்னாட்டுக் கோயில் திருப்பாவை, திருவெம்பாவை பாடும் போது தூக்கத்திலிருக்கும் நாம் இனந்தெரியா ஓர்வித இன்பமும் பக்தியும் உண்டாகி விழிப்படைகிறோம். உடலுடன் உள்ளமும் விழிப்படைகிறது என்பதை நம்மில் ஒருவரும் மறுக்கமாட்டார்கள்.

பெரியாழ்வார் கண்ணன் குழலோசையில்,

"பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே"

என்றும்,

"மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர்கொம்புகள்
தாழும்!

என்றும்,

பலவாறாக வருணிக்கிறார். திருஞான சம்பந்தாது இசையில் பாவசமுற்ற பாமன் அவர்க்குப் பொற்றாள மீந்து அருளியதைப் புராண வாயிலாக அறிகிறோம்.

நம் அமரகவி பாரதியாரோவெனில் இந்தியர்க்குப் பேச்சுச் சுதந்திரமற்ற அன்னிய ஆட்சியில் பாட்டின் மூலமாக மக்களுள்ளத்தில் மாபெருங் கிளர்ச்சியையே உண்டாக்கிவிட்டார். "செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்றும், "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்றும் நம் உரிமையை உணர்த்தினர். ஜயபேரிகை கொட்டடா என உள்ளத்தில் உறங்கிக் கிடந்த சுதந்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர். மற்றும் "ஆயுதஞ் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்; ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைபபோம்; மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்" என்றெலாம் பாடினர். அவர் முழுமனதுடனும் உறுதியுடனும் பாடியவை இன்று பலிதமாயின.

ஸங்கீதம் ஒரு அரியகலை. அது மக்கள் மனத்தின் மாசு போக்கி, மனக்கவலை நீக்கி, பக்தியை உண்டாக்கி, நல்வாழ்வை அளிக்கிறது. ஆதலால் நாம் விரும்பிக்கற்று மேன்மையடைவோம்.

ப்ரஹ்லாத நாரதாதி பக்தலு பொருகடு
கண்டே

நீநாம ரூபமுலகு நித்யஜெப மங்களம்.

P. வேதவல்லி,
ஐந்தாம் படிவம், 'எ' பிரிவு.

சேதி நாட்டுக் காந்தி

'துன்பம்செய்தார்க்கும் இன்பமே செய்க' என்று கூறி அன்பின் வடிவாக வாழ்ந்தவர் காந்தி மகான். ஆதியில் திருவள்ளுவரும், அண்மையில் காந்தியடிகளும் அவ்விதம் புகட்டியிருக்க, இடைக்காலத்தில் அங்ஙனமே நடந்து காட்டினார் நம் தமிழக அரசரொருவர். சேதிநாடு என்னும் நாட்டின் ராசதானியாக விளங்கிய திருக்கோவலூரில் 'மெய்ப்பொருள் நாயனர்' என்றொருவர் ஆட்சிபுரிந்து வந்தார். சிவனடியாரிடம் அளவற்ற அன்புபூண்ட இவர் மீது 'முத்திநாதன்' என்பான் பன்முறை படையெடுத்துத் தோற்றான். ஆதலின் சூழ்ச்சி புரிந்து பகை முடிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்குப் பிறந்தது. அதனால் சிவனடியாரைப்போல் வேடம்பூண்டு, சுவடியும் கையுமாக மெய்ப்பொருளார் அரண்மனையை அடைந்தான். வாயிற் காவலர் பக்தி விசுவாசத்துடன், பற்பல வாயில்களையும் கடந்து பள்ளியறைக்கு அழைத்துச் சென்றனர். ஆங்கிருந்த 'தத்தன்' என்னும் வாயில் காப்போன் "இது மன்னவர் உறங்கும் நேரமாதலால் இப்போது செல்வது தகுதியன்று' என்றான்.

முத்திநாதனோ "மன்னர்க்கு உறுதிப்பொருள் கூறப்போகும் என்னைத் தடை செய்யாதே' என்று கூறிவிட்டு உள்ளே சென்றான். உள்ளே சென்றதும் அரசன் தேவி அரசரை எழுப்பினள். அரசனது வினவுக்குப் பதில் கூறும் வகையில் "நம் இறைவன் அருளிச்செய்த ஆகமங்களுள் ஒன்று என்னிடம் உள்ளது. அதனை உமக்கு அறிவிப்பேன்" என்றான். மேலும் 'தனியாகவே உபதேசிக்க வேண்டும்' என்றும் கூறினன். அக்கணமே நாயனர் அவனை உயர் ஆசனத்தில் அமர்த்தித் தான் தரையில் அமர்ந்தான். மாயக் கவளியை முத்திநாதன் அவிழ்ப்பான் போல் பாசாங்கு செய்தான். நாயனர் அவனது பாதங்களைத் தொட்டு வணங்கினர்.

அதுவே தக்க தருணமெனக் கண்டு, அக்கொடியோன் கவளியிலிருந்த கத்தியை யெடுத்து நாயனரைக் குத்தி விட்டான். அவ்வேளையில் உட்புகுந்த தத்தன் முத்திநாதனை வெட்டியெறிய முற்பட்டான். அவ்வேளையில் இரத்தம் வழிந்தோட நாயனர் 'தத்தனே! இவர் நம்மவர்; சிவ வேடம் பூண்டவர். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் வேண்டும். ஆதலின் வழியே தீங்கு நேராதவாறு காத்து இவரைக் கொண்டுவிடு. இதுவே என் விருப்பமும் கட்டளையுமாம்' என்றார்.

அங்ஙனமே தத்தன் செய்தனன். உற்றது உணர்ந்த ஊரார் உருத்தெழுந்து வந்து அப்பாவியை மாய்க்க முயன்றனர். தத்தன் அரசனது ஆணையை அறிவித்து, சினத்தைத் தணித்தான். இதற்கிடையில் நாயனர்க்கு உயிர் துடித்துக் கொண்டிருந்தது. தத்தன் திரும்பிவந்து "என் ஐயனே! உமது ஆணைப்படியே அப்பாதகனைப் பத்திரமாக அனுப்பிவிட்டேன்" என்று கூறிக் கண்ணீர் வடித்தார். நாயனர் அது கேட்டு ஆறுதல் அடைந்து "அன்பே நீயே உண்மையான பணியாளன்!" என்று வாழ்த்தினன். பின்னரே பரத்தில் கலந்தார் **சேதி நாடடுக் காந்தி.**

"இன்னா செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு ?"

ஆர். சூடாமணி,
ஆறும் படிவம், 'ஈ' பிரிவு.

கடல்

உலகம் உவப்ப, வானுற வோங்கும்
விரிகதிர் ஞாயிறு மிளிர்ந்தெழ, ஆங்கே
பலபல வாகப் படர்ந்து, தவழ்ந்து,
அசைந்தெழுந் தமர்ந்து, ஆடும் அலைகளின்
கண்கொளாக் காட்சி காண்பதும் அரிதே!

நீலக் கடலில் மேலசைந் தாடிடும்
வங்கமும் படகும் அங்கங்கு செல்ல,
மணியுந் தரளமும் வண்ணப் பவளமும்
மலியக் கொழிக்கும் மாண்பு கொள்கடலில்
மகரமுங் கெண்டையும் பகர்பல மீனும்
வளர்ந்து, திளைத்து, வாழ்வு கொண்டிடுமே!

விண்மீன் சூழ வெளியிவர் தண்மதி
எழில்தரும் காலில் இன்பம் செழிக்க,
ஓதம் செறிந்த சீதக் காலின்
புனற்றுளி வீசிடப் பொங்குமே உள்ளம்;
பொங்கிய வுளத்திற் போதமேற் படுமே!

ஈ. வி. பத்மாவதி,
ஆறும் படிவம், 'உ' பிரிவு.

உலக சமாதானம்

'சமாதானம்' என்னும் பதத்தை உச்சரித்தாலே நமக்குச் சற்று நிம்மதி ஏற்படுவது போன்றதொரு உணர்ச்சி தோன்றுகின்றதல்லவா?

இன்றைய உலகில் சமாதானம் ஒவ்வொரு ஜீவராசிக்கும் வாழ்வளிக்கும் ஔடதம். மக்கள், உலக வல்லரசுகளின் பலப்போட்டியினால் விளையும் கோரமான உலக யுத்தங்களைக் கண்டு மிகவும் பீதி அடைந்திருக்கிறார்கள். எங்கும் பஞ்சமும், வேலையில்லாத் திண்டாட்டமும், பொருளாதாரச் சீர்கேடும் நிலவி நிம்மதியான வாழ்வை மக்களிடமிருந்து பறித்துக் கொண்டு விடுகின்றன.

அடிமைத் தலையினின்றும் மக்கள் தங்களை அறுத்துக்கொண்டு துள்ளி எழுந்து தங்கள் உரிமையைக் கோருகின்றார்கள்.

எங்குப் பார்த்தாலும் 'சமாதானம் ஓங்குக' என்ற இன்ப ஒலி நமக்குத் தைரியத்தையும், நல்வாழ்வின் உத்திர வாதத்தையும் தருகிறது.

சமாதானம் நிலவினால் தான் எந்த நாடும் எல்லாத்துறைகளிலும் முன்னேற முடியும். சமாதானத்திற்காக யார் உழைத்தாலும் அவர்கள் தொண்டு மிகவும் உயர்தரமானது. உலகமக்களின் நல்வாழ்வு சமாதானத் தொண்டர்களின் கையில் தான் இருக்கிறது. சமாதானகாலத்தில் எந்த நாடும்சீக்கிரத்தில் குறைந்த செலவில் தொழிற்சாலைகள், நீர்ப்பாசனத்திட்டங்கள், அணைக்கட்டுகள் முதலியவற்றைக் கட்டி அபிவிருத்தி அடைய முடியும்.

சமாதானத்திற்காகப் பாடுபடும் நாடுகளில் நம் பாரத நாடு மிகவும் முக்கியமானது. தற்கால அரசியல் அரங்கில் இந்தியா தான் முதன்மை ஸ்தானம் பெற்று உலக வல்லரசுகளிடையே உள்ளக் கசப்பைப் போக்கி வருகின்றது. எந்த முக்கிய சிக்கலான விவகாரத்தையும் இந்தியா சுமுகமான முறையில் தீர்த்து வைக்கின்றது. உலக வல்லரசுகளே இந்தியா சமாதானத்திற்காகச் செய்துவரும் பணியைப் மிகவும் பாராட்டுகின்றன. உலக மக்களின் விருப்பமும் உலக சமாதானம் தழைத்தோங்க வேண்டுமென்பது தான். உலக சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சமாதான இயக்கங்கள் ஆற்றிவரும் பணியை உலகெங்கும் மக்கள் பாராட்டி ஒத்துழைத்து வருகின்றார்கள். உலக சமாதானத்திற்காக பாரதம் ஆற்றிவரும் தொண்டைப்போற்றி நாம் பெருமை அடைகின்றோம்.

ஓங்குக சமாதானம்!
வாழ்க உலக, மக்கள்!!

S. R. ருக்மணி,
ஆறும் படிவம், 'உ' பிரிவு.

மன்னன் கடமை மக்களைக் காப்பதே

வானத்தைத் தொடும்படியான மரங்கள் நிறைந்த ஒரு காடு—காட்டின் ஒருபக்கம் சிறிய ஆறு—மற்றொரு பக்கம் விண்ணைக் குத்தும் மலை—மலைச்சாரலில் வற்றாத ஊற்றுகள்—பசிய செடிகள், கொடிகள்—இந்த இயற்கைக் காட்சிகள் கண்ணுக்கு விருந்தாயின. எழில்மிக்க இக்காட்டில் மான்கள் பல வாழ்ந்து வந்தன. ஆயிரத்திற்கும் அதிகமான மான்களின் அரசு சுவேதன் என்னும் மான்.

சுவேதன் அழகுடன் வீரமும் வாய்ந்த கம்பீரமான தோற்றமுடையது. 'மன்னனுயிர்த்தே மலர்தலை உலகம்' என மண்ணுளும் மன்னர்க்குக் கூறப்படும் முதுமொழியைத் தானே உணர்ந்த தன்மையது அந்த மான் அரசு. அது தன் உயிரினும் மேலாகப் பிற மான்களைப் பாதுகாத்து வந்தது. மான்கள் யாவும் தம் அரசின் அரிய குணத்தை அறிந்து அதனை அன்புடன் நேசித்தன.

இருள் அடர்ந்த அக்காட்டில் மனிதர் சென்று மான்களுக்குத் துன்பம் செய்யவில்லை. ஆதலின், மான்கள் பயமின்றி இன்பமாகக் காலங்கழித்து வந்தன. மலைச்சாரலில் வேடர்வரக் கண்டால், அவை காட்டிற்குள் சென்று பதுங்கிக்கொள்ளும். அவர்கள் சென்றபின், தம் விருப்பம்போல மலைச்சாரலில் சென்று மேய்ந்து இன்புறும். இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவது இயல்பன்றோ? கவலையென்பதறியாது துள்ளி விளையாடிய மான் கூட்டத்திற்குப் பெருந்துன்பம் வந்தது.

புதிய வேடனொருவன் அங்கு வந்தான்; மான்கள் பயமின்றிப் புல் மேய்தலைக் கண்டான்; அவைகளின் நடுவில் மானரசனை சுவேதன் கம்பீரத் தோற்றத்துடனும், பெருமிதத்துடனும் நிற்றலைக் கூர்ந்து கவனித்தான்; அவ்வழகிய மான் தன் அரசன் அரண்மனைக்கு அழகு செய்யத்தக்கது என்பதை உணர்ந்தான்; விரைவில் அரண்மனையை அடைந்தான். அரசனிடம் தான் பார்த்த மானரசின் அழகை வியந்து கூறினான். அவ்வரசனும் அம்மானை அடைய விரும்பினான். மறுநாள் வேடர்கள் புடைசூழ அரசன் காட்டிற்குச் சென்றான். மான்களை வேட்டையாட வேடர்களுக்குக் கட்டளை இட்டான். வேடர்களும் காட்டில் புகுந்தார்கள். அவர்களிடமிருந்து மான்களை எவ்வாறு தப்புவிப்பது என்ற எண்ணம் மானரசின் மனத்தில் தோன்றியது. இத்துன்பத்தைப் போக்குவது எளிதன்று என்பதை அது உணர்ந்தது. காலத்தை வீணாக்குவதில் பயனில்லை. வேடர்கள் காட்டில் புகுந்து விட்டால், காட்டில் பதுங்குவது இயலாது. மானரசு சிறிது நேரம் யோசித்து, ஆற்றைத்தாண்டி அக்கரை சென்றாலன்றி உயிரிழத்தல் திண்ணமென்பதை அறிந்து, தன் இனத்துடன் ஆற்றங்கரையை அடைந்தது.

குறுகலான அந்த ஆற்றில் நீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. மான் கன்றுகள் அதை நீந்தி அக்கரை சேர்தல் இயலாது. ஆகவே மானரசு ஆற்றில் இறங்கி நடுவே நின்று கொண்டது. மற்ற மான்களைத் தன் மீது தாவிக்குதித்து அக்கரை செல்லக் கட்டளை இட்டது. அதன் தலையும் முதுகும் நீர் மட்டத்துக்கு மேல் தெரிந்தன. மான்கள் ஒவ்வொன்றாக அதன்மீது குதித்துத் தாவி அக்கரை சேர்ந்தன. ஆனால், மானரசின் நிலை என்ன? அதன் முதுகு புண்பட்டு இரத்தம் பெருகியது. அதன் வாய்வழியே அதிக நீரும் வயிற்றுக்குள் சென்றுவிட்டது. இறுதியாக அதன்மீது குதித்த மான்கன்று மறுகரை சேரமுடியாது தத்தளித்ததால், அதனை மானரசு தன் புண்பட்ட முதுகில் சுமந்து சென்று அக்கரை சேர்த்தபின்னர் தான் அக்கரையிலேயே விழுந்து இறந்தது. அரசரும் அவனைச் சேர்ந்தவரும் மானரசின் தன்னலமற்ற செயலைத் தூரத்திலிருந்து கவனித்தனர். தம் அரசு இறக்கவே, மான்கள் அதனைச் சூழ்ந்து நின்று கண்ணீர் உகுத்தன; அதனைப் பிரிய மனமில்லாமல் நின்றன. வேடர்கள் தங்களை நெருங்கவே, அவை ஓடி மறைந்தன. அவ்விடத்தை

அடைந்த அரசன் அம்மானரசனுன சுவே தனே வியந்து, அஃறிணைப் பொருளாகிய இம்மான் தன் இனத்தைக் காக்கத் தன்னுயிரையே விட்டுவிட்டது ; குடிகளுக்கு வரும் இன்னலேத் துடைப்பது மன்னவன் கடமை என்பதை உணர்த்திவிட்டது!' எனக்கூறி, அதனுடலே எடுத்துவரக் கட்டளே இட்டு, ஆங்கோரிடத்தில் அதனே அடக்கஞ் செய்தான் ; அதன் வீரச்செயலே நினைவு கூர அழகிய நினைவுச்சின்னம் எழுப்பினன்.

இக்கதையிலிருந்து அறிந்துகொள்ளும் நீதி யாது? தான் எவ்வளவு துன்பத்தை அடைந்தாலும், உயிரையே இழக்க நேர்ந்தாலும், தன் குடிகளே இன்புற வாழவைப்பது மன்னவனின் கடமையாகும் என்பதே.

'மன்னவனின் கடமை மக்களேக்காப்பதே'

என். ரேவதி,
ஐந்தாம் படிவம், 'ஊ' பிரிவு.

சர் பிரபுல்ல சந்திர ராவ்

பிரபுல்லர் 1861 ஆம் ஆண்டில் ஹரீஸ சந்திர ராவ் என்பவரின் மகனுக அவதரித்தார். இவர் எளிய குடும்பத்தைச்சேர்ந்தவர். முதலில் தம் தந்தையார் நடத்திய பள்ளியில் படித்தார். பிறகு கல்கத்தாவிலுள்ள ஓர் உயர்நிலேப் பள்ளியில் சேர்ந்து படித்தார். பிறகு கல்லூரிப் படிப்பையும் முடித்தார். பிரபுல்லர் இங்கிலாந்து சென்று படிக்க ஆவல் கொண்டார் ; அங்குச்சென்று படிக்க உபகாரச் சம்பளம் தரும் தேர்வு எழுதி வெற்றி பெற்ருர். பின்னர் அங்குள்ள எடின்பர்க் பல்கலேக் கழகத்தில் சேர்ந்து ஆறு ஆண்டுகள் தங்கி விஞ்ஞானக் கலேயில் புலமை பெற்ருர்.

பிரபுல்லர் 1889ல் தாய்நாடு மீண்டார். அவர் வங்க மாகாணக் கல்லூரியில் இரசாயனப் பேராசிரியராக அமர்ந்தார். அங்கு மாணவர் ஏற்றுக் கொள்ளுமாறு கருத்துகளேத் தெளிவாகக் கற்பித்து வந்தார். அங்கு இவருக்குக் கிடைத்த ஊதியம் இருநூற்றைம்பது ரூபாயே. அந்தத் தொகையிலும் ஒரு சிறு பகுதியைச் சேர்த்து வைத்து இராசாயனத் தொழிற்சாலே ஒன்றை நிறுவினர்.

பிரபுல்லரின் ஊக்கத்தைக் கண்ட வங்க மக்கள் அவரைப் பெரிதும் பாராட்டினர் ; அவருடைய பங்கு கொண்டு இரசாயனத் தொழிற்சாலேயை வளர்க்க ஒன்றுபட்டனர். அதனல் இரசாயனத் தொழிற்சாலே வளர்ச்சியுற்றது. அதுவரை இந்தியாவில் செய்யப்படாத பல புதிய மருந்துகளும், மருத்துவக் கருவிகளும் அத்தொழிற்சாலேயிலேயே செய்யப்பட்டன. நாட்டுப்பற்றுடைய பல அறிஞரும் அவருடன் கலந்து அத்தொழிற்சாலேயை மேல் நிலேக்குக் கொண்டுவர உழைத்தனர்.

பிரபுல்லர் தம் இடைவிடாத உழைப்பின் மூலம் பல புதிய இரசாயன முடிபுகளேக் கண்டு பிடித்தார். பதினைந்து ஆண்டளவும் ஆராய்ந்து இந்திய இரசாயனக்கலே வரலாறு என்னும் அரிய நூலே வெளியிட்டார். அவர் தம் ஆராய்ச்சியைக் கேட்ட மேனுட்டு அறிஞர்கள் அவரைப் பாராட்டினர்.

பிரபுல்லர் 1919-ம் ஆண்டில் 'சர்' என்னும் பட்டம் பெற்ருர். அவர் தற்பெருமையை விரும்பாதவர் ; அடக்கத்தையும், எளிமையையும் கைக்கொண்டவர் ; நாட்டுப்பற்று உடையவர் ; இந்தியா மற்ற நாடுகளேப்போல் இராசயனத் துறையில் முன்னேற வேண்டுமென்ற ஆவல் கொண்டவர் ; எனவே அவரது தொழிற்சாலே மிகப் பெரிய அளவில் வளர்ச்சியடைந்திருக்கிறது.

பிரபுல்லர் இராசயனக் கலேயிலும் மருத்துவக் கலேயிலும், சிறப்புப் பெற்றவர். ஒரு பெரிய தொழிற்சாலே அமைத்து நம் நாட்டிற்குத் தேவையான மருந்துகளே தயாரிக்க முற்பட்டவராவர். அப்பெரியார் வரலாறு நமக்கு ஒரு உதாரணமாக இருக்கத் தக்கது.

வி. எஸ். பிரேமா,
ஆரும் படிவம், 'உ' பிரிவு.

உழைப்பின் மேன்மை

இவ்வுலகின்கண் அவதரித்துள்ள மக்கள் அனைவரும் தமது வாழ்க்கையில் வெற்றியும், புகழும், உயர்வும் பெற விரும்புகிறார்கள். இதற்குத் தன்னம்பிக்கை, ஊக்கம், உழைப்பு, விடாமுயற்சி, அஞ்சாமை ஆகிய ஐந்தும் மிகவும் அவசியமாகும். 'தன்னம்பிக்கையோடு முயற்சி செய்; வெற்றி உன்னுடையதே' என்று ஜேம்ஸ் ஆலன் என்னும் அறிஞர் கூறியுள்ளார்.

வாழ்க்கையிலே முன்னேற வேண்டும் என்னும் அவாவினை உடையவர்கள் தங்களது இளம் வயதிலேயே ஒரு சிறந்த குறிக்கோளினை அமைத்துக் கொள்ளவேண்டும்.

உலகம் ஒரு பெருங்கடல். வாழ்க்கை அதில் செல்லும் ஒரு சிறு கப்பல். அக்கப்பலைச் செலுத்துபவன் குறிக்கோள் இல்லாமலிருந்தால், தான் சென்று சேரும் இடம் என ஒன்றில்லாமல் அலைவான். கடலின் பேரலைகளுக்கும், பெருமீன்களுக்கும், சூறாவளிக்கும் இலக்காகி அவன் கப்பல் அழியும். அதனோடு கூட அவனும் மரணத்தின் வாயிலை அடையவேண்டியதுதான். இதைப்போன்றுதான், வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்னும் குறிக்கோள் இல்லாதிருப்பவர்கள் பல துன்பங்களுக்கும் ஆளாகித் தமக்கும் பிறர்க்கும் பயனின்றி மறைவர். ஆகையால் ஒவ்வொருவனும் ஏதேனும் குறிக்கோளை அமைத்துக் கொண்டு காலத்தை வீணாக்காது முயல வேண்டும்.

'காலம் பொன் போன்றது. அது உன் உயிர். அதனை வீணாக்குவது உன்னை நீயே கொலை செய்வதற்கு ஒப்பாகும்' என்றார் சார்லஸ் வாக்னர் என்னும் பெரியார். 'காலம் கருதி இடத்தாற் செயின் ஞாலம் கருதினும் கைகூடும்' என்று வள்ளுவப் பெருந்தகை அருளியுள்ளார். ஆகையால் நொடிப்பொழுதையும் வீணாக்காமல் முயல வேண்டும்.

காலத்தை வீணாக்குபவன் சோம்பேறி. அவனால் ஒன்றும் செய்யமுடியாது. 'முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை' என்றான் வீர நெப்போலியன். "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்றார் பட்டினத்தடிகள். 'கேட்பவன் கொடுக்கப்படுவன்' என்பது ஏசுநாதரின் பொன்மொழி. 'கடவுளை நம்பு. ஆனால் உன் கடமையைச் செய்யத்தவறிவிடாதே!' என்பது முகமது நபியின் திருவாக்கு. 'முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்' என்றார் செந்நாப் போதார். இப்பொன் மொழிகளை மனத்தில் இருத்தி இடையறாது முயலவேண்டும். இவ்வாறு முயன்றவர்களே உலகில் உயர்ந்து விளங்குகின்றார்கள்.

பரந்த அறிவும் மனவுறுதியும் உடைய பலர், தமது இடையறாத உழைப்பினால் யாவரும் போற்றப் புகழும் பொருளும் பெற்று உயர்ந்து விளங்குகிறார்கள். அத்தகையோரின் வரலாற்றைப் படித்தறிய வேண்டும்.

முசோலினி ஒரு கொல்லனின் குமாரர். இவர் இளமையில் செங்கல் தூக்கிப் பிழைத்துவந்தார்; ஆயினும் தனது இடையறாத உழைப்பினால் இத்தாலி நாட்டுக்குச் சர்வாதிகாரியாக விளங்கினார். ஜான். டி. ராக்பெல்லர் என்பவர் தொடக்கத்தில் ஒரு கணக்கர். இவர் தமது உழைப்பினால் அமெரிக்காவில் மண்ணெண்ணெய்ப் பேரரசரானார்; 165 கோடி ரூபாய்களை அறச் செயல்களுக்குக் கொடுத்துப் புகழுடம்பு பெற்றார். எளிய குடும்பத்தில் பிறந்து மீன் பிடித்து விற்றுவந்த ராம்ஸே மாக்டொனல்டு என்பார் உழைப்பினால் பிரிட்டிஷ் முதலமைச்சராக மூன்று முறைவிளங்கிப் புகழ்பெற்றார். விறகு வெட்டி சாப்புக்கடை நடத்தி வாழ்ந்து வந்த ஆப்ரஹாம் லிங்கன் உழைப்பினால் அமெரிக்க நாட்டுக்குத் தலைவரானார். ஒரு சைகிள் தொழிற்சாலையின் வேலையாளாக இருந்த சர் வில்லியம் மோரிஸ் தமது உழைப்பால் 'மோரிஸ் கார்' என்று புகழ் பெற்ற மோட்டார் கம்பெனியின் உரிமையாளராய் உயர்நிலையடைந்தார்

எளிய குடும்பத்தில் பிறந்தும், கல்வி கற்க வசதியில்லாது இருந்தும் வயிறு வளர்க்கப் பல சாதாரணத் தொழில்களைச் செய்து வாழ்ந்த பலர் தமது ஊக்கத்தாலும், உழைப்பினாலும் உயர்நிலையை அடைந்தனர். அத்தகையோர் வரலாறு வாழ்க்கையை வளப்படுத்தும் உயிர்ச்சத்துக்கள் ஆகும். அவர்கள் வழியைக் கடைப்பிடித்து நல்வாழ்வுபெற வழி கோலிக் கொள்வோர், வாழ்க்கையில் வெற்றி பெற்று விளங்கலாம்.

V. சரோஜா,
ஆறும் படிவம், 'உ' பிரிவு.

முன்கோபக்காரர்

கிருஷ்ணசாமி என்ற பெயரைக் கேட்டாலே குட்டிச் செட்டி தெருவில் குடியிருக்கும் அத்தனை பையன்களும் அலறி ஓட்டம் பிடிப்பார்கள். காரணம்? அவர் ஒரு முன் கோபக்காரர். அவர் சொல்வதே சரி என்று தலை ஆட்டவேண்டும். அவருக்கு எதிராக யாராவது கூறினால் உடனே அவரிடம் அறை வாங்கிக்கொள்ள அவர்களுடைய கன்னங்கள் இரண்டும் தயாராக இருக்க வேண்டும்.

ஒருநாள் அவர் பகல் சாப்பாட்டைச் முடித்துக்கொண்டு கையை அலம்புவதற்காக வாசலுக்கு வந்தார். அப்போது அவருடைய தலையில் ஒரு மாங்கொட்டை வந்து விழுந்தது. உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது; செம்பை அப்படியே வைத்துவிட்டு தெருபக்கம் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார். தெருவிலே ஒரு பிச்சைக்காரப் பையன் போய்க்கொண்டிருந்தான். கிருஷ்ணசாமி அவனை நெருங்கி அவனுடைய கன்னங்களிலும் முதுகிலும் மாறி மாறி அடிக்க ஆரம்பித்து விட்டார்.

"ஐயோ! .... அம்மா! .... ஆ! என்று அலறியவாறே வலி தாங்காமல் கீழே விழுந்துவிட்டான் அந்தப் பையன். அதற்குள் அங்கு ஒரு பெரிய கூட்டமே கூடி விட்டது. "அயோக்கியப்பயல், மாம்பழத்தைத் தின்றுவிட்டு கொட்டையை என் தலையைப் பார்த்து எறிந்து விட்டானே! இவனுக்கு எவ்வளவு கொழுப்பு!" என்று கூறிக்கொண்டே திரும்பவும் அவனைக் காலால் உதைத்தார் கிருஷ்ணசாமி.

அப்போது அங்கே ஓடிவந்தான் கிருஷ்ணசாமியின் மகன். அவன் அப்பாவைப் பிடித்துக் கொண்டு "அப்பா! அப்பா! வேண்டாம்" என்று அவரைத் தடுத்தான். எல்லோரும் அவனையே கூர்ந்து பார்த்தனர்.

"அப்பா நீங்கள் சாப்பிடும்போது நம் வீட்டுச் சுவர்மீது ஒரு காக்கை உட்கார்ந்து மாங்கொட்டைக் கொத்திக் கொண்டிருந்தது. பிறகு நீங்கள் கை அலம்ப வாசலுக்கு வரவே அது கொட்டையை எடுத்துக் கொண்டு பறந்து ஓடப்பார்த்தது; ஆனால் கொட்டை அதன் வாயிலிருந்து நழுவி உங்கள் தலையிலே விழுந்து விட்டது. இதைச் சொல்லத்தான் நான் ஓடி வந்தேன். அதற்குள் நீங்கள் வேகமாக வந்து இப்படி இந்தப் பையனை அடித்து விட்டீர்களே!" என்றான்.

மகன் கூறியதைக் கேட்ட கிருஷ்ணசாமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்படியே அசையாமல் சிறிது நேரம் நின்றார். பிறகு அந்தப் பிச்சைக்காரப் பையனை மெதுவாக இருகைகளாலும் தூக்கினார். அவன் தலையைத் தடவிக் கொடுத்துக்கொண்டே "தம்பி, தெரியாமல் அடித்துவிட்டேன், என் முன்கோபம் என் அறிவை மறைத்து விட்டது. என்னை மன்னித்துவிடு" என்று கெஞ்சினார்.

அதற்கு அந்தப் பையன் ஒன்றுமே சொல்லவில்லை; தலையைக் குனிந்தபடியே மௌனமாக நின்றான். உடனே அவர் மெதுவாக அவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு

வந்தார். அவனுக்கு உணவு கொடுத்து, அவனை அன்புடன் வழியனுப்பிவைத்தார்.

அன்று முதல் அவருடைய முன்கோபம் குறைந்து வரலாயிற்று. இப்போது கோபம் என்பதே அவருக்கு வருவதில்லை. அவ்வளவு சாதுவாகி விட்டார்.

இதனால் யாருக்கும் முன்கோபம் கூடாது என்பது தெரிகிறது அல்லவா?

ஆர். பிரேமா,
மூன்றும் படிவம், 'இ' பிரிவு.

தமிழ்

அம்மம்ம! தமிழ் என்ற சொல் எவ்வளவு புனிதமானது! தமிழ் என்பதற்கே இனிமை என்றுதான் பொருள். சூறாவளியை எதிர்த்து வெற்றிபெற்ற தென்றலைப் போன்று பிறமொழிகளை வென்று முதன்மைத் தானம் வகிக்கிறதல்லவா? இத்தமிழ் தற்காலத்தில் தோன்றியிருக்கின்ற அடுக்கு மொழிகளை அள்ளிவீசும் அறிஞர்களும், கற்பனைக் கடலிலே மூழ்கிக் கவிதைகளைக் கருத்துடன் தீட்டும் கவிஞர்களும், பண்பு நிறைந்த பாக்களைப் பாங்காக இயற்றுவிக்கும் பழந்தமிழ் வள்ளல்களும் இத் தமிழின் சிறப்பை நன்குணர்ந்து தங்களுடைய பாக்களின் வழியாகவும், கவிதைகளின் வழியாகவும் புகழ்ந்திருப்பதை நோக்கின் இமயத்தைவிட பன்மடங்காக உயர்ந்திருக்கின்றது என்றே கூறலாம்.

குன்றாத எழிலையுடைய இன்பத்தமிழிலே ஊறித்திளைக்கும் தமிழ்மக்களில் பெரும்பாலோர் நாட்டுப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று ஆகிய இம் முப் பற்றுக்களிலும் பற்றுதலின்றி இருப்பது வருந்தத்தக்கது. இச்செந்தமிழ் உதித்துத் திகழும் நாடு இத்தமிழ் நாடேயாகும். அந்நாளில் தித்திக்கும் தீந்தமிழ் நிறைந்த குறள்களை அளித்த திருவள்ளுவரும், முத்தமிழ் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்த சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோ அடிகளும், இந்நாளில் தண்டமிழ்ச்சொற்களை ஒன்றுதிரட்டி இன்னிசை விருந்தாகப் பாக்களை நமக்குப் பகிர்ந்தளித்த கவி சுப்பிரமணிய பாரதியாரும் நம் தமிழ் நாட்டவரே ஆவர். அந்திய காலத்திலே அலைகடலின் மீது அன்னமென நகர்ந்திடும் மாக்கலங்களை நாம் காணும் தோறும் மனத்திலே கிறுகிறுப்பை ஏற்படும்படி கப்பல் ஓட்டிய தமிழனாகிய வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களும் இத்தமிழ் நாட்டவரேயன்றோ?

நம் தமிழ்நாட்டில் பெரும்பாலோர் மொழிப்பற்றின்றி இருக்கின்றனர். இனிமையான இத் தமிழ்மொழியில் பிறரிடம் பேசும்பொழுது அம்மொழியுடன் பிறமொழியையும் கலந்து பேசுகிறார்கள் பலர். இவ்விதம் பேசுவதைப் பார்க்குந்தோறும் சங்கீத சாலையில் ஒப்பாரிவைக்கும் வீரனைப் போல் அல்லவா இருக்கிறது! இத்தமிழ் மொழிக்கு இத்தகைய இழிசொல் தோன்றுவதன் காரணம் அந்நிய நாட்டுமொழி நடுவில் குறுக்கிடுவதுதான். இச்செந்தமிழைப் பேசுவதற்குத் தமிழ் மக்களாகிய நமக்குத் தான் நாப்பழக்கமே தவிர அந்நிய நாட்டவர்களுக்கு அல்ல. அவர்கள் பிறருடன் பேசும்பொழுது நம் தமிழ்மொழி குறுக்கிடுவதில்லை. ஏனெனில் அந்நாட்டவருக்கு மொழியின் மீதுள்ள பற்றுதலே ஆகும். மேலும் தமது தாய்மொழியை உச்சரித்துப் பேசக்கூடிய நாப்பழக்கம் அவர்களுக்குக் கிடையாது.

தற்காலத்தில் தமிழ்மொழியின் சிறப்பு சில இடங்களில் சிறிது குறைய ஆரம்பித்திருக்கிறது. காரணம் என்னவெனில் தமிழ்நாட்டிலே பிறந்து தமிழ்மொழியையே மேற்கோளாகக் கொண்டு நடப்பவர்களாகிய தமிழ் மக்களே இத்தமிழ் மொழியை இழிவாகக் கருதும்போது அயல்நாட்டார் இழிவாகக் கருதுவதில் வியப்பொன்றுமில்லை.

ஆகவே நம் தமிழ் மக்கள் செய்யும் இச்செயலானது ஈன்றதாயை விட்டு வேறு தாயிடம் போய் "அம்மா" என்று அழைப்பது போல் இருக்கிறது. எனவே இத்தாயகத்தில் உதித்த மக்களாகிய நாம் தமிழின் புகழை வானளாவ உயரச்செய்வது நம் கடமை அல்லவா? "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் பாடலின் வாயிலாகத் தமிழ் பிறந்த நாட்டை எவ்வாறு புகழ்ந்திருக்கின்றார்கள் என்று நமக்குப் புலப்படுகின்றதல்லவா?

முதன்முதலில் வந்தமொழி இத்தமிழ் மொழியே. அதன்பிறகு நம் நாட்டிற்கு வந்த ஆங்கிலேயர்களின் வாயிலாக நமக்குக் கற்பிக்கப்பட்டதுதான் ஆங்கிலம். அந்நியர் நம் நாட்டிற்கு வருமுன் இச்செந்தமிழ் வளமுற்றுச் சிறந்து விளங்கி இருந்தது. ஆனால் ஆங்கிலமொழி நடுவில் குறுக்கிடவே இதன் எழில் குன்ற ஆரம்பித்துள்ளது. தமிழ் மொழியே!! உறங்கிக் கிடக்கும் தமிழ் மக்களை விழிப்பூட்டுவது உன் கடமை என்பதை உணரவில்லையா? தமிழ் மக்களே! விழித்தெழுங்கள். உங்களுடைய வரவிற்காக தமிழ்மொழி காத்திருக்கின்றது. ஆகவே தமிழர்களாகிய நாம் தமிழ்மொழியுடன் இயைந்து தமிழின் பலவீனத்தைப் போக்குவோமாக! எனவே பழந்தமிழர்களாகிய நாம் தமிழின் சிறப்பையும் அதன் பெருமைகளையும் நன்கு உணரவேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் இன்சுவை மிகுந்த இவ்வண்ணத் தமிழைப் புத்துணர்ச்சியோடு புதுப்பித்து நாட்டிற்கு நல்வினையைச் செய்வதோடல்லாமல் மனம் என்னும் வயலிலே பிறமொழிகள் என்று சொல்லப்படும் களைகளை களைந்தெறிந்துவிட்டு தமிழ் என்று சொல்லப்படும் பைங்கூழ்களை வகையுடன் சாகுபடி செய்வோமாக!!

பெருகுக நம் தமிழ்! ஓங்குக நம் மொழி!!

ரா. கமலா,
ஐந்தாம் படிவம், 'ஈ' பிரிவு.

ஐயோ! பாழும் ஐந்தே!

டங்! டங்! டங்! டங்! டங்!!

கடிகாரம் ஐந்தடித்து ஓய்ந்தது. தேர்வுக்காக வேண்டிக் காலையில் வெகு சீக்கிரம் எழுந்திருக்க வேண்டுமென நினைத்தும் ஐந்து மணிக்குத்தான் எழமுடிந்தது. எழுந்திருக்கும் போதே சற்றுத் தலைவலி. இருந்தாலும் கடமையை உணர்ந்து வலி மறந்து அமர்ந்தேன். நல்ல வேளை! அன்று நடக்கவிருந்த தமிழ்த் தேர்வுக்கு முதல் ஐந்து மணிக்கு எழுந்து ஐந்து பாடங்களைச் செவ்வனே படித்தேன். பள்ளியில் இன்னொரு விசேஷம் என்ன தெரியுமா? உடல் நலக் குறைவினால் அவ்வாரத்தில் (தேர்வுக்கு முன்பு) ஐந்து நாட்கள் செல்லாதிருந்த போது ஐந்து ஆசிரியைகள் பாட ஏடுகளைப் பரிசோதித்துப் பார்த்திருக்கிறார்களாம். தற்பொழுது நான் ஐந்து ஏடுகளையும் தூக்கிச் செல்லவேண்டும். அன்று பள்ளிசென்று பார்த்தேன். ஒன்று! இரண்டு! மூன்று! நான்கு! ஆ! ஐந்தாவதான கணக்கு நோட்டு எங்கே! வழியில் தவறிவிட்டதா சரி! பின்பு பார்ப்போம்! தேர்வைக் கவனிப்போம் என எண்ணி மற்றைய ஏடுகளை ஆசிரியைகளிடம் கொடுத்துவிட்டுச் சென்றேன். என்னுடன் கூட வந்ததும் ஐந்து பேர்தான். என்னே ஆச்சரியம்! கூட்டத்தில் சென்று உட்கார்ந்து ஒரு கண்ணோட்டம் விட்டேன். கூட்டத்தில் ஐந்து ஆசிரியைகள் இருந்தார்கள். எங்களைக் காக்க இல்லையில்லை எங்களை எக்காரியமும் எழுதுவதைத் தவிர செய்ய முயல்வதைத் தடுக்க. மணியடித்தது! கேள்வித் தாளைப் பெற்றுக் கொண்டேன். முதல் கேள்வியைப் பார்த்ததும் உடனே எழுதத்

தலைப்பட்டேன். ஏனெனில் தெரிந்தது— எதிர்பார்த்தது. அடுத்தடுத்து எழுதினேன்; முதல் ஐந்திற்கும் விடை விரைவாக எழுதினேன். ஆறுவது, உம்! ஏதோ ஞாபகத்திலிருக்கிறது. ஆனால் வரவில்லை. இந்தச் சமயத்தில்தானா கணக்கு ஆசிரியை வரவேண்டும்! பயம் ஒரு பக்கம் தள்ளிக் கொண்டு உடல் வியர்க்க ஆரம்பித்தது. ஐந்தாவது பேராக என்னைக் கூப்பிட்டார்கள்! என் நிலைமையை எடுத்துச் சொன்னேன். வீட்டில் பார்ப்பதாகக் கூறினேன்! மறதி என்பது மனிதனுக்கு இயற்கைதானே! இதைச் சொன்னதும் கோபம் வந்ததைப் பார்க்க வேண்டுமே! 'உம்'! சரி இன்று மத்தியானம் மூன்று மணிக்குள் கொண்டு வந்து கொடுத்து விடவேண்டும். இல்லையானால் ஐந்து 'மார்க்' குறைத்து விடுகிறேன்' என்று எச்சரிக்கை செய்தார்கள். 'ஐந்தா! சரி! மொத்தத்திலேயே ஐந்து வாங்கியிருந்தால் பிறகு பூஜ்யம்தானா' என்றெல்லாம் எண்ணத்தலைப்பட்டு மேற் கொண்டு எழுதினேன். ஐந்து நாட்கள் தேர்வும் ஓடியது. கடைசி நாள்! என் சிநேகிதிகளிடம் விடை பெற்றுத் திரும்பும் போது மாலை ஐந்து மணி! எல்லோரும் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தனர். அடுத்த ஒரு ஊரில் நடக்கும் ஒரு சொந்தக்காரர்களின் வைபவத்திற்கு, அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, நான்; ஆ! இங்கும் ஐந்து! சரி என்று காரில் சென்றோம். வேகமாகச் செல்ல வேண்டும் போன்றிருந்தது. ஊர் எல்லையைக் கடக்கும் தருணம்' ஐந்து மைல் வேகத்தில் போ' என்ற எச்சரிக்கைப் பலகை ஒன்று தெரிய சற்றுக் குறைத்துக் கொண்டார் 'டிரைவர்'. அங்கு என் சுற்றத்தாரைக் காணலாம். பழைய சிநேகிதிகளைக் காணலாம். மேலும் ஐந்து ஊர்களுக்கும் செல்லவேண்டியிருப்பதால் இந்த விடுமுறை நன்கு கழியும் என எண்ணிக் கொண்டும் பேசிக்கொண்டும் செல்லும் போது புஸ்! என்ற சப்தம். ஆம்! கார் 'டயர்' பஞ்சர்! சிறிது நேரத்தில் சரியாகிவிடும் என்று கூறி வேறு டயரை மாற்ற முனைந்தான். இறங்கிப் பார்த்ததில் கார் நின்றிருந்த இடம் ஐந்தாவது மைலில்! ஆம் ஐந்து எனப்போட்ட கல் நின்று என்னைப் பார்த்துச் சிரித்தது. என் செய்வது. எல்லாம் அன்று ஐந்தாக இருந்தது. பள்ளி திறப்பதும் ஐந்தாம் தேதியாம். பலவிதத்தில் அந்த ஐந்து என் கண் முன்னே தோன்றிப் பயமுறுத்தி வந்திருக்கிறது. ஐயோ பாழும் ஐந்தே! என் நிழல் போல் தொடர்கிறாய்! எட்டிப்போ!

A. நீலாவதி,
ஐந்தாம் படிவம், 'ஊ' பிரிவு.

மகாத்மா

பாரத அன்னையின் கையிலுள்ள அடிமை விலங்குகளை உடைத்தெறியப் பாடுபட்ட மகாபுருஷருள் ஒருவர்தான் அண்ணல் காந்தி அடிகள். அவருடைய அன்றாட வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் யாவும் எல்லோருக்கும் அறிவை ஊட்டுவனவாகும். ஆதலால்தான் அவர் மகாத்மாவனார்.

அவர் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் இரண்டு ருசிகரமான சம்பவத்தை எண்டுக் குறிப்பிட விழைகின்றேன்.

ஒருசமயம் அடிகள் ஒரு கிராமத்தில் பல இளைஞர்களைக்கொண்டு ஒரு ஆசிரமத்தை நடத்தி வந்தார். அதில் அடிகள் உள்பட அனைவரும் ஆங்குள்ள கிராமமக்களுக்குப் பல தொண்டுகளைப் புரிந்து வந்தனர்.

அந்த ஆசிரமத்தில் சேரவேண்டுமானால் பல நிபந்தனைகள் உள்ளன. அதாவது, தங்களுடைய வேலைகளைத் தாங்களே செய்து கொள்ளுதல் வேண்டும். ஆடம்பரமே அங்குக் காணப்படாது. எல்லாம் எளிய முறையில்தான் நடக்கும். காப்பி, டீ போன்ற பானங்களை அங்குக் காணமுடியாது. மேலும் கதர் ஆடையே உடுத்துதல் வேண்டும். இவ்விதக் கோட்பாடுகளுக்கு இணங்கிப் பல தொண்டர்கள் தொண்டுபுரிந்து வந்தனர்.

ஒரு நாள் ஒரு தனவந்தர் அந்த ஆசிரமத்திற்கு வந்து அடிகளின் உத்தரவு கொண்டு ஒரு அறை எடுத்துக்கொண்டு தங்கியிருந்தார். சில நாட்களுக்குப்பின் ஒருநாள் காந்தி அடிகள் தனவந்தர் இருக்கும் அறைக்குச் சென்றார். காந்தி அடிகளைக்கண்ட தனவந்தர் சிறிது நேரம் பேசிவிட்டு, கடைசியாக 'இங்கு நான் சாப்பிட்டுவிட்டு வைக்கும் பாத்திரங்களை யாரும் எடுத்துப்போவதில்லை' என்று கூறினார். அடிகள் அதற்கு "நாளையிலிருந்து பாத்திரங்களை வெளியே எடுத்து வைத்து விடுங்கள்; கொண்டு போய்விடுவார்கள்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

மறு தினத்திலிருந்து பாத்திரங்கள் வெளியே எடுத்து வைக்கப்பட்டன. அது காலையில் நன்கு துலக்கப்பட்டு அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருக்கும். இது போல பல நாட்கள் நடந்து வந்தது.

ஒருநாள் தனவந்தர் தன் அறையில் தூங்கிக்கொண்டிருந்தார். அப்போது வெளியே யாரோ சாமான் துலக்கும் ஓசைகேட்டு எழுந்து வந்தார். சாமான் துலக்குபவர் காலடி சப்தம் கேட்டுத்திரும்பிப் பார்த்தார். அவரைப்பார்த்த தனவந்தர் திடுக்கிட்டார். ஏனெனில் அங்குச் சாமான் துலக்கிக் கொண்டு இருந்தவர் நமது காந்தி அடிகள் ஆவர். திகைத்து, 'தினமும் நீங்களா சாமான் விளக்குகிறீர்கள்' என்று கேட்டார் தனவந்தர். புன்னகைபூத்த முகத்துடனே 'ஆமாம்' என்று தலையசைத்துவிட்டு, இதை அவரவர் வேலைகளை அவரவர்களேதான் செய்து கொள்ளுதல் வேண்டும். ஆதலால்தான் நான் இவ்வேலையைச் செய்து வருகிறேன்' என்று மிகவும் சாந்தமாகப் பதிலளித்தார்.

மற்றொரு சமயம் ஆசிரமத்தில் தொண்டு செய்துவந்த தொண்டர்களில் ஒருவருக்குக் காய்ச்சல் கண்டது. அதனால் அவர் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஆகையால் காந்தியடிகள் அத்தொண்டரின் அறைக்குச் சென்றார். அவர் அங்கு ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். காந்தி அடிகளைக்கண்ட அத்தொண்டர் கை கூப்பி வணங்கினார். காந்தி அதை புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்டார். பிறகு அவர் 'உமக்கு என்ன வேண்டும்?' என்று வினவினார்.

தொண்டருக்குக் காப்பி குடித்துப் பல நாட்கள் ஆனபடியால் காப்பி குடிக்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவர் அதைச் சொல்லத் தயங்கினார். அஃது ஆசிரம விதிகட்கு மாறுபட்டது என்று அத்தொண்டருக்குத் தெரியும்; ஆனாலும் அவர் தன் ஆவலை அடக்க முடியாமல் "காப்பி வேண்டும்" என்று தட்டுத்தடுமாறிக் கூறினார். அப்போது காந்தி அடிகளைக் கண்ட அவர் ஆவலை அடக்கமுடியாமல் அவரைக் கேட்டுவிட்டோமே, இவை காந்தி அடிகள் விரும்பாதனவாயிற்றே, என்று அவர் முகம் பயத்தால் வெளிறியது. இதைக்கண்ட அடிகள் புன்முறுவல் பூத்தவாறே வெளியே சென்று சிறிதுநேரம் கழித்து அவர் உள்ளே வந்தார். அப்போது அவர் கையில் ஒரு காப்பிக் கோப்பை இருந்தது. அதில் சூடான காப்பி இருந்தது. அதைக்கண்ட தொண்டர் அடிகளின் செயலை எண்ணி வியந்தார்.

பிறகு அத்தொண்டரைப் பார்த்து காந்தி அடிகள் 'இந்தாருங்கள் காப்பி; இதை உடனே குடியுங்கள்' என்று காப்பிக் கோப்பையை அவரிடம் நீட்டினார். தொண்டரும் அதை வாங்கி மடக் மடக் என்று குடித்துவிட்டார். அப்போதே அவரது காய்ச்சல் நீங்கியதுபோல் இருந்தது.

அத் தொண்டர் காந்தி அடிகளின் உள்ளன்பை அப்போதுதான் புரிந்து கொண்டார்.

ஆகையால் பெரியார் காந்தியின் அன்றாட வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சம்பவமும், மாணவிகளாகிய நமது எதிர் கால வாழ்விற்கு ஒரு ஊன்றுகோல் போல் ஆகும் என்பதில் ஐயமில்லை.

டி. சரோஜா,
ஐந்தாம் படிவம், 'ஈ' பிரிவு.

படக் காட்சி

போகாத பொழுதைப் பயன் தரும் பொழுதாகப் பரிணமிக்கச் செய்யும் சாதனங்களுள் படக்காட்சியும் ஒன்றாகும். சோர்வுற்ற உள்ளத்திற்கு உற்சாகமூட்டி மக்களின் அறிவு வளர்ச்சிக்கு அருந்துணையாகப் படக்காட்சி திகழ்கிறது.

படக் காட்சி முறையினைக் கண்டறிந்த பெருமை ஸர். தாமஸ் ஆல்வா எடிஸன் என்னும் புகழ்பெற்ற விஞ்ஞானியைச் சாரும். மின்சாரத்தின் உதவியால் படங்களை இயக்கிக் காட்டுவது படக்காட்சியாகும். முன் காலத்தில் இயங்காத படங்களும் மௌனப் படங்களுமாக இருந்தன. நாகரிகத்தின் முதிர்ச்சியினாலும், பல அரிய சாதனங்களாலும் அவை இயங்குகின்ற படமாகவும், பேசுகின்ற படமாகவும் மாறின. நடிகர்களை நடிக்கச்செய்து படமெடுத்து அவற்றை இயக்கிக் காட்டுகின்றனர். கதைக்கு ஏற்ற சில மனப் பாடங்களும், பாடல்களும், ஆடல்களும் அமைந்து காட்சிக்குக் கவின் தருகின்றன. ஏதேனும் கதைகளை அடிப்படையாகக்கொண்டு படமெடுக்கின்றனர். தற்காலப் படக்காட்சி பிரமிக்கத் தக்க முறையிலே முன்னேறியுள்ளது. உண்மையாகக் காண்பது போன்று காட்சிகள் திரையில் காட்டப்படுகின்றன. பல வர்ணப் படங்களும் காட்டப்படுகின்றன. இன்றைய உலகியலைத்தழுவிப் படக் காட்சிகள் பாங்காக அமைந்துள்ளன. மின்சாரத்தின் மாண்புறுதுணை பெற்ற படக் காட்சி இன்றைய அறிவுலக வளர்ச்சியை அறிவுறுத்துகின்றது.

அமெரிக்கா, ரஷ்யா முதலிய தேசங்களில் கல்வியைக்கூடப் படக்காட்சிகளாலேயே கற்றுத் தருகின்றனர். இன்றைய படாதிபதிகள் மக்களின் சுவைக்கேற்ப ஆடல் பாடல்களையும், கதாம்சங்களையும் அமைத்துப் பணம் பெறும் மார்க்கமாக மட்டுமே படக் காட்சியைப் பயன்படுத்துகின்றனர். மக்களின் அறியாமை நீங்கி, ஆரோக்கியம் பெருகி, அறிவு வளர்ந்து, ஆற்றல் பெருகச் செய்யுமாறு அமைந்த காட்சிகளைப் படமெடுத்துக் காட்டினால் நாடு சிறப்புறும். இன்றைய படவுலகு வெறும் பொழுது போக்குச் சாதனமாக, பணம் பறிக்கும் மார்க்கமாக இருப்பது வருந்தத்தக்கது. மக்களின் ஆத்ம வளர்ச்சிக்கு அடிகோலும் அம்சங்கள் படக் காட்சியில் புகுத்தப்பட்டால் பொன்மலர் நாற்றமும் பெற்றாற் போன்று படக்காட்சி சிறப்புறும். விவசாயத்தில் கடைப் பிடிக்க வேண்டிய முறைகளையும், ஜனநாயக ஆட்சியில் மக்களின் கடமைகளையும், உரிமைகளையும் குறித்தும், இன்னும் இவைபோன்ற அறிவைக் கூர்மையாக்கும் வேறு பல முறைகளையும், வாழ்வை வளமாக்கும் வழிகளையும், கண்ணெனத்தகும் கல்வியின் இன்றியமையாமையையும் படமாகக் காட்டுவதன் மூலம் பிரசாரம் செய்வதினும் மேலான பலனை யாம் பெறலாம்.

இத் துறையில் பாண்டித்தியம் பெற்றோர் பணத்தைப் பெரிதாகப் பாவிக்காது, நாட்டின் உண்மை நாகரிகத்திற்கும், சுபிட்சத்திற்கும் வழிகோலும் வகையில் படக் காட்சியை உபயோகிக்கும் நன்னாளே படவுலகும், நாடும் உண்மையில் முன்னேற்றமடையும் நாளாகும்.

ஞா. சுகுமாரி,
ஆறும் படிவம், 'ஈ' பிரிவு.

உலகத்திலேயே பெரியவை

1. மிக உயர்ந்த மலைச் சிகரம் = எவரெஸ்டு சிகரம்; 29,002 அடி.
2. மிக நீண்ட மலைத் தொடர் = அண்டீஸ் தென் அமெரிக்கா; 5,000 மைல்.
3. மிகப்பெரிய மணல் வனாந்தரம் = சகாரா; 30,00 000 சதுரமைல்.
4. மிக உயர்ந்த கட்டிடம் = மாஸ்கோவிலுள்ள அரசாங்கக் கட்டிடம்; 1,356 அடி; 6,000 அறைகளுடையது.
5. இரண்டாவது உயர்ந்த கட்டிடம் = ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அரசினர் கட்டிடம்; 1,298 அடி உயரம் 102 மாடிகள்.
6. மிகப்பெரிய அரண்மனை = வத்திகான் (உரோமில்) போப் மாளிகை.
7. மிகப்பெரிய கப்பல் = குவீன் எலிசபெத்; 83,673 டன்.
8. மிகப்பெரிய பட்டிணம் = லண்டன்; 700 ச. மைல்.
9. மிகப்பெரிய வைரச் சுரங்கம் = கிம்பர்ளி; தென்னாப்பிரிக்காவில் உள்ளது.
10. மிகப்பெரிய உயர்ந்த உருவச் சிலை = விடுதலைச் சிலை; 151 அடி உயரம்; நியூ யார்க்கில் உள்ளது.
11. மிக உயர்ந்த கிறிஸ்துவ தேவாலயம் = அலம்; ஜெர்மனியில் உள்ளது; 529 அடி உயரம்.
12. மிகப்பெரிய கடல் = பசிபிக் கடல்; 63,986,000 சதுர மைல்.
13. மிகப்பெரிய தங்க வயல் = ஜோகானஸ்பேர்க்; தென்னாப்பிரிக்காவில் உள்ளது.
14. மிகப்பெரிய பூகண்டம் = ஆசியா.
15. மிகப்பெரிய நீண்ட பிரகாரம் = இராமேஸ்வரம் கோயில் பிரகாரம்.
16. மிகப்பெரிய வைரம் = கலினன் இது திரான்ஸ்வாலில் 1905ல் எடுக்கப்பட்டது இதன் நிறை 3,106 காரட்.
17. மிகப்பெரிய குகை = மம்மத்கேவ்; ஐக்கிய அமெரிக்காவில் உள்ளது.
18. மிக நீண்ட ரயில் பாதை = இரிகாவிலிருந்து விளாடிவஸ்டக் வரை; 6,000 மைல்
19. மிகப்பெரிய தொலைவு நோக்கி = கலிபோர்னியாவிலுள்ள பலமார் மலையில் வைக்கப்பட்டுள்ளது; கண்ணாடி 200 அங்குலக் குறுக்களவு.
20. மிகப்பெரிய நூதன பொருட்காட்சிச்சாலை இருக்குமிடம் = லண்டன்.

21. மிக நீண்ட ஆறு = மிசூரி மிசுசுபி; 4,502 மைல்.

22. மிகப்பெரிய ஆறு = அமேஸான்; கழிமுகம் 27,20,800 சதுர மைல்.

23. மிகப்பெரிய கட்டிடம் = கிசேயிலுள்ள பிரமிட்டுச் சமாதி.

24. மிகப்பெரிய ஆழமான கடல் = பசிபிக் கடல்; 35 410 அடி.

25. மிக உயர்ந்த அணைக்கட்டு = ஹுவர்; (ஐக்கிய அமெரிக்காவில் உள்ளது) 726 அடி உயரம்.

26. ஐரோப்பாவிலுள்ள எரி மலைகளில் பெரியது = எட்னு; 10,800 அடி உயரம், 91 மைல் சுற்றளவு.

27. மிகப்பெரிய எரிமலை = மோனுலோயின்; வாய் 12,:00 அடி குறுக்களவு.

28. மிக நீண்ட சுவர் = சீனப் பெரும் சுவர்; 1,500 மைல்.

29. மிக நீண்ட மலைக்குடைவு = சுவிட்சர்லாந்திலுள்ள சிம்பிளன்; 12 மைல், 1,374 அடி.

30. மிகப்பெரிய கிரகம் = வியாழன்.

31. மிகச் சிறிய பறவை = ஊங்காரப் பறவை; மூக்குமுதல் வால்வரை 2½ அங்குலம்.

தொகுத்தவர்:
P. M. நாகலக்ஷ்மி,
நான்காம் படிவம், 'அ' பிரிவு.

பிச்சைக்காரர் பிரசினை

நம் இந்தியாவில் பிச்சைக்காரர் என்னும் ஒரு தனிவர்க்கமே நிரந்தரமாக ஏற்பட்டு விட்டதென்பது ஒரு மறுக்கமுடியாத, மறக்கவும் முடியாத உண்மை. உலகின் வேறு எந்தப் பாகத்திலும் இவ்வளவு பிச்சைக்காரர்கள் கிடையாது. கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பிச்சைக்காரர்களே கிடையாது. நமது இந்தியாவிலும் கூட வட இந்தியாவைக் காட்டிலும் தென்னிந்தியாவில் பிச்சைக்காரர்கள் அதிகம். சென்னையில் மட்டுமே சுமார் ஏழாயிரம் பிச்சைக்காரர்கள் இருப்பதாகச் சென்ற ஜனத்தொகைக் கணக்கிட்டின் போது தெரிய வந்தது.

இந்த நிலை எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? என்பதையெல்லாம் ஆராயும் போது, இதற்குப் பரிகாரம் தான் என்ன? உண்மையிலேயே பிச்சைக்காரர் அற்ற ஒரு சமுதாயத்தை நாம் காணப் போகிறோமா? என்று மனச்சாட்சி உள்ள, தேசியப்பற்றுடைய ஒவ்வொருவரும் நினைந்து மனம் புழுங்குவர். "தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் சுகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதி கூறிய நாட்டில் நாம் இருப்பது உண்மையாயின், நம் உடலில் வேறெதுவுமின்றி இரத்தம் ஓடுவது உண்மையாயின்—நாம் இந்தப் பிரசினைக்கு ஒரு வழி வகுத்திருக்க வேண்டும்.

'ஒவ்வொருவரும் பிச்சைக்காரராகப் பிறந்துவிடுவதில்லை; பிச்சைக்காரர் உண்டாக்கப்படுகின்றனர்' என்று ஹிட்லர் தமது (Mein Campf) மெயின் காம்ப் என்ற நூலில் எழுதியிருக்கிறார். அது எவ்வளவு உண்மை! பிச்சைக்காரர்கள் எப்படி உண்டாக்கப்படுகிறார்கள் என்பதை இவண் ஆராயப் புகுவோம்.

முதலாவதாக 'தெய்வ சதி' அல்லது 'இயற்கையின் விளையாட்டு' என்று கூறப்படும் வானம் பொய்த்தலால் நிலங்களில் பாடுபட்டு உழைக்கும் பாட்டாளி மக்கள் பரிகாரமற்ற காரணத்தால் திக்கற்ற நிலைக்கு வந்து விடுகின்றனர். ஆனால், இதற்குப் பரிகாரமுண்டு. இவ்வவலக் கேட்டிற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவதாகக் கூட்டுறவு முறையில் சேராது தனித்து வாழ்வதும், ஊரில் ஒற்றுமையின்றிப் ஊராரைப் பகைத்துக் கொள்வதன் மூலம் மற்றவர் உதவிக்கு வராத நிலையில் தங்களை வைத்துக் கொள்வதும் ஆகும். இரண்டாவதாக, 'கருங்காலம் வரும்; அதற்கு ஆவன இப்போதே செய்யவேண்டும்' என்று வருங்காலத்திற்கு ஏதும் சேமித்து வைத்துக் கொள்ளாமை ஆகும். இவ்வகையாக வாழ்க்கையில் நொந்து பிச்சையெடுக்கும் நிலைக்கு வந்தவர்கள் ஒரு வகையில் தங்களுக்குத் தாங்களே பொறுப்பாளிகளாயினும், அரசாங்கம் கைகட்டி நின்று ஏதும் செப்ப முன் வாராதிருத்தல் தவறு. அவர்களைக் கை தூக்கி விட்டு, அவர்கள் மீண்டும் நிலத்தில் உழைத்துப் பயன்பெறும் வரை அவர்களுக்குப் பணவுதவியோ அல்லது பொருளுதவியோ கொடுத்து ஆதரிக்க முன்வர வேண்டும். ஒருவகைப் பிச்சைக்காரர்களை இப்படிக் குறைத்துக்கொள்ளலாம்.

இரண்டாவதாகத் தொழிலில் ஊக்கமின்மை, ஆதாயமின்மை இவற்றை எடுத்துக்கொள்வோம். மட்பாண்டம் செய்தல், கைத்தறி நெசவு செய்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்ட ஜனங்கள் பிச்சைக்காரராய் அலைவதைக் கடந்த சில வருடங்களாகக் கண்டு வருகிறோம். இவர்கள் விஷயம் மிகவும் நெருக்கடியானது. ஏனெனில் இவர்கள் ஜீவியத்திற்கு அரசாங்கமே யாதொரு பாதுகாப்புமளிக்காமல் இருந்துவிட்டது. இயந்திர வுலகம் கைத்திறன் நசிந்து விட்டது. எனவே, தொழிலின்மையாலும், தொழில் இருப்பினும் போதிய ஆதாயமின்மையாலும், இவர்கள் தம் மக்கள் தொழிலைச் சரிவரக் கற்றுக் கொள்ளாமையாலும், தங்கள் தொழிலும் தெரியாமலும், மற்ற தொழில்களில் புதுவதற்கேற்ற தைரியமும் இன்மையாலும் இவர்கள் பிச்சைக்காரர்களாய் அலையவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதற்கு மாறாக அரசாங்கம் என்ன செய்யவேண்டும் என்ற வினா எழும். ஆம்! அரசாங்கம் செய்வதற்கோர் வழியுண்டு. அந்தத் தொழில் 20-ம் நூற்றாண்டிற்கு ஏற்றதாய் இருந்தால் அத்தொழிலை ஊக்குவித்தல் வேண்டும். அந்தத் தொழிலுக்கு யந்திரப் போட்டி கூடாது. இல்லை, இனி அத்தொழில் முன்னுக்கு வாராது என்று திட்டவட்டமாகத் தெரிந்தால் பரிகாரமாக, அத்தொழில் புரியும் மக்களுக்குச் சரியான பாதுகாப்பு அல்லது வேறு தொழில் கற்றுக்கொடுத்து அவர்கள் ஜீவனம் செய்ய வழிகாட்ட வேண்டும். இல்லையெனில் நாமே பிச்சைக்காரர்களை உண்டாக்கியோர் ஆவோம்.

ஆக இவ்வாறும், இன்னும் அநேக விதங்களிலும் பிச்சைக்காரர்களைப் பெருக்கிக் கொண்டு போவது ஒரு அவலக்கேடான நிலையன்றோ! இதற்குப் பரிகாரங்கள் எத்தனையோ இருப்பினும் அவற்றை இங்கே நான் கூறப்புகுந்தால் வாசகர்களது பொறுமையைச் சோதித்தவளாவேன். ஆதலின் ஒன்றிரண்டு பரிகாரங்களைக் கூறிக்கொள்வதோடு இக்கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

பிச்சைக்காரர்களைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்தில் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில விடுதிகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆனால் அவற்றில் அதிகபட்சம் இருநூறு பேர்களுக்குமேல் வசதியாக வைத்துக்கொள்ள முடியாது. அதாவது, மொத்தப் பிச்சைக்காரர் ஜனத்தொகையில் இது முந்நூற்றில் ஒருபங்கோ, அதற்கும் கீழோ தானாகிறது. மேலும் பிச்சைக்காரர்களில் கண்ணிழந்தோர்,

உறுப்புக்களையிழந்தோர், பெரு நோயாளர் போன்றோர் இருப்பினும், தொழில் செய்து வயிறு வளர்க்க விரும்பாதோர் பெரும் பான்மையோராக இருக்கின்றனர். அரசாங்கம் உண்மையில் இவர்களுக்கு ஒரு பரிகாரம் தேடுவதில் ஆர்வம் கொண்டவராக இருந்தால், உடல்நலம் குன்றாதவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்தம் போக்கிதாம் சங்களைக் கவனித்து, அவர்களுக்கு ஒரு தொழிலில் ஆர்வத்தை உண்டாக்கி, அவர் தம் வாழ்க்கையைச் செப்பனிடல் வேண்டும். அரசாங்கத்திற்கு இந்த வேலை அவ்வளவு சுலபமானதல்ல என்று தோன்றினால், சமூக நலனில் ஆர்வமுள்ள தன வந்தர்கள் பலரை நாடி, கைத்தொழில் அபிவிருத்தி சாலைகளை உண்டாக்கி, கோரிய நற்பயனை அடையலாம். அதேபோன்று கண்ணிழந்தோர், உறுப் பிழந்தோர் போன்றோரது சிகிச்சைக்கு ஆவன செய்தல் வேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கைபெற்று, பிறருதவியின்றித் தங்கள் வாணுட்களைக்கழிக்க வழிவகை செய்யவேண்டும். விழாக்கள், கொண்டாட் டங்கள், விளம்பரங்கள் இவற்றுக்கென கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிடத் திட்டங்கள் வகுக்கும்போது, பிச்சைக்காரர் களின் தோற்றங்களையும் தங்கள் கண்முன் நிறுத்தி, மனச்சாட்சியுடன் செலவிட விருக்கும் பணத்தில் ஒரு பங்கைப் பிச்சைக் காரர்களுக் கென எடுத்துவைத்தாலே போதும், பிச்சைக்காரர்களின் வாழ்க்கை செம்மையடைவற்கு!

கடைசியாக, ஒரு வார்த்தை அரசாங்கத்தையே நம்பியிருக்கும் சமுதாயம் எதற்கும் பயனற்றதாகி விடும். பொதுமக் களும் தங்களாலியன்ற வரை, பிச்சைக்காரர் களுக்குச் சோறிட்டோ, இடமளித்தோ அவர்களை மேலும் சோம்பேறிகளாக்கி விடா மல் நெல்லிக் கனியுண்டு நெடுநாள் வாழ்ந்த நல்லிசைப் புலமை நரைமூதாட்டியாரின் 'போனக மென்பது தானுழந் துண்ணல்' என்ற நல்லுரையைப் பொருள் விளங்கக்கூறி, உழைப்பின் உயர்வை உளம்பட உணர்த்தி, யாதானுமொரு தொழிலில் அவர்களை ஊக்கு வித்தல் வேண்டும். இன்னும், குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு அதிசௌகரியத் தில் வாழும் குடும்பத்தினர் இவர்களில் ஒரு வரைத் தங்கள் குடும்ப அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொண்டாலும் பாதகமில்லை யென்றே கூறுவேன். ஏனெனில் முற்பகுதி யில் ஹிட்லர் கூறுவது போன்று ஒவ்வொரு வரும் பிச்சைக்காரர்களாப் படைக்கப் படுவதில்லை. மேலும் இச்சமயம் ஆங்கிலக் கவிஞர் ஸாமர் ஸெட்மாம் என்பவர் தனது ஹாப் ஹ்யூமன் பாண்டேஜ் (Half Human Bondage) என்ற நூலில், "பிச்சை யெடுத்தல் என்பது ஒரு சௌகரியக் குறைவைக் காண்பிக்கிறதேயன்றி, கௌரவக் குறைவைக் காண்பிக்கும் ஒரு விஷயமன்று" என்று ஒரு சம்பவத்திற்கு விளக்கவுரையாகக் கூறியிருப்பது நினைவிற்கு வருகிறது. தவிர, ஷேக்ஸ்பியரும் கூட, தனது வெனிஸ் வர்த்தகன் (Merchant Of Venice) என்ற நூலில், போர்ஷியா (Portia) என்ற கதாபாத்திரத் தின் மூலமாக, ஈதலின் மேன்மையைக் கூறுகிறார். விவேகானந்தரும்கூட, "கோயில் குளங்கள், பெரிய கட்டடங்கள் இவற்றுக் கெனப் பணத்தைச் செலவிடுவதைக் காட்டி லும், ஒரு பிச்சைக்காரனின் வாழ்வைச் சீர்திருத்துவது மேலானது" என்று கூறி யுள்ளார்.

அரிய விஷயங்கள் அடங்கிய நற்புத்தகங் களைக் கரையான் அரிப்பது போன்று, செந் நெல் வயல்களைக் காளான்கள் அழிப்பது போன்று, இன்று நாம் அசட்டையாக இருப் பின், ஒரு நல்ல சமுதாயமே, இந்தப் பிச்சைக்காரர் பிரச்சினையால் தாழ்நிலை யடைந்துவிடும் என்பது உறுதி. மற்ற எந்தப் பிரச்சினையைக்காட்டிலும் இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆவனசெய்ய முற்பட வேண்டும். அப்படிச் செய்வதனால் மற்ற தேசங்களில், 'பிச்சைக் காரர் மலிந்த பிரதேசம்' என்று (Miss. Mayo) மிஸ் மேயோ போன்றோரால் துஷ் பிரசாரம் செய்யப்பட்டு இந்த விஷயத்தில் புகழ் மங்கியிருக்கும் நமது தேசம் முன்னி லும் பன்மடங்கு ஒளிபெற்று, குன்றின்மேல் விளக்கெனப் பிரகாசிக்கும் என்பது உறுதி.

கே. என். ராஜலட்சுமி,
ஆறும் படிவம், 'ஈ' பிரிவு.

அறிவும் அறியாமையும்

ஒரு குருவும் சீடனும் பிற இடங்களைக் காணும் ஆசையால் ஊர்சுற்றிவரக் கிளம்பினர். ஒரு பெரிய பட்டிணத்தில் பல நாட்கள் தங்கினர். அந்தப் பட்டிணத்தை ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒரு புத்தியில்லாத பைத்தியக்காரன்.

ஒருநாள் ஒரு திருடன் அரசனிடம், 'மகாராஜா, எனக்குத் திருடுவது தான் வேலை. நேற்று ஒரு பெரிய மனிதரின் வீட்டிலே திருடப்போனேன். சுவர் ஏறிக் குதிக்கும் போது அதில் ஒரு கல் விழுந்துவிட்டது. அதனால் நானும் கீழே விழுந்து கால் முறிந்துவிட்டது. அதற்கு எனக்கு அந்தப் பணக்காரர் நஷ்டஈடு தரவேண்டும்' என்று முறையிட்டான். அந்த மூளைகெட்ட அரசன் பணக்காரர்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னான். பணம் கேட்டதற்கு அவன் 'அது என் தப்பல்ல. அதைக் கட்டின கொத்தனை விசாரியுங்கள்' என்றான். கொத்தனைப் பிடித்து இழுத்துவந்து விசாரிக்க 'அவன் அது என் தப்பல்ல; கட்டும்போது ஒரு பாடகன் ஊர்சுற்றுபவன் பாடிக்கொண்டே போனான். அதைக் கேட்டுக்கொண்டே இருந்ததால் அஜாக்கிரதையாக மேல் பூச்சுப் பூச மறந்து விட்டேன். அதனால் அந்தப் பாடகன்தான் அதற்குக் காரணம்' என்றான். பிறகு அந்தப் பாடகனை இழுத்துவரச்சொல்லி அவனுக்கு அரசன் தூக்குத் தண்டனை விதித்தான். பாடகன் 'மகாராஜா, என் குருவுக்கு உணவு தேட நான் பாடிப் பிச்சை எடுப்பது வழக்கம். அதுபோல அன்றும் குருவுக்காகச் சென்றேன். அதனால் இதற்குக் குருதான் மூலகாரணம்' என்றான்.

தன் சிஷ்யனைத் தேடிக் காணாது வந்த குரு அரசனிடம் விஷயமறிந்து தனக்கே மரண தண்டனை தரும்படி கட்டாயப் படுத்தினான். தானாகவே வந்தவரைக் கண்டு ஆச்சரியமடைந்த அரசன் 'நீர் என் உயிரைவிட வேண்டும்?' என்றான். 'அரசே எனக்குப் பின்னால் நடக்கப்போவதைச் சொல்வதற்கு வல்லமை உண்டு. உம்மால் தூக்குத்தண்டனையை அடைந்து சாகிறவன் உடனே மறுபிறவி எடுத்து இந்த நாட்டிற்கு ராஜாவாக வருவான். அதனால் எனக்கே மரண தண்டனை விதியுங்கள்' என்று குரு கெஞ்சினான்.

உடனே அரசன் 'முடியாது, முடியாது அரசனாக வருவதற்குத்தான் சூழ்ச்சி செய்கிறீர்களா? நானே தான் மறுபடியும் இந்த நாட்டிற்கு அரசனாக வரவேண்டும்; ஆதலால் எனக்கே அந்த மரண தண்டனையை நிறைவேற்றுங்கள்' என்றான். காவலாளிகள் அரசன் சொற்படி அவனைக் கொலைசெய்தனர்.

புத்தியோடு சமயத்திற்குத் தகுந்தபடி நடக்கத் தெரியாதவர்களுக்கு இந்த கதிதான் என்று எல்லோரும் கூறினர்.

P. K. வசந்தகுமாரி,
முதற் படிவம், 'அ' பிரிவு.

பக்கம் 49 — மூளைக்கு வேலை—விடைகள் :

விடைகள் : 1. உப்பு. 2. வானம். 3. நெல். 4. பசு.
5. நெருப்பு. 6. உப்புப் பாத்தி. 7. வெள்ளைப் பூண்டு.
8. விளக்கு.

கடைசி ஆசை

காட்டில் ஒரு சிங்கம் நரியைப் பார்த்து நான் உன்னை விழுங்கபோகிறேன் என்றது.

உன்னுடைய கடைசி ஆசை என்ன? என்று கேட்டது.

நரி, நான் ஒரு பூனையை விழுங்க வேண்டும் என்றது.

ரொம்பசரி; போய் ஒரு பூனையைக் கொண்டுவா என்றது சிங்கம்.

நரி பூனையைத் தேடிப்பிடித்து நான் உன்னை விழுங்கபோகிறேன். உன்னுடைய கடைசி ஆசை என்ன? என்று கேட்டது.

பூனை நான் ஒரு எலியை விழுங்கவேண்டும் என்றது.

ரொம்பசரி போய் ஒரு எலியைப் பிடித்துவா என்றது நரி.

பூனை ஒரு எலியைத் தேடிப்பிடித்து நான் உன்னை விழுங்கப்போகிறேன். உன்னுடைய கடைசி ஆசை என்ன? என்று கேட்டது.

எலி எனக்கு ஒரு தவளையை விழுங்கவேண்டும் என்றது.

பூனை ரொம்பசரி போய் ஒரு தவளையைப் பிடித்துவா என்றது.

எலி, ஒரு தவளையைத் தேடிப்பிடித்து உன்னை நான் விழுங்கப்போகிறேன். உன்னுடைய கடைசி ஆசை என்ன? என்று கேட்டது.

தவளை ஒரு ஈயைச் சாப்பிடவேண்டும் என்றது.

ரொம்பசரி; போய்வா என்றது எலி.

தவளை ஒரு ஈயைத் தேடிப்பிடித்து உன்னை நான் சாப்பிடபோகிறேன். உன் கடைசி ஆசை என்ன? என்று கேட்டது.

ஈ எனக்கு வெகுகாலமாக ஒரு சிங்கத்தைக் கடிக்கவேண்டுமென்று ஆசை என்றது.

தவளை ரொம்பசரி; போய் ஒரு சிங்கத்தைக் கடித்துவிட்டுவா என்றது.

ஈ ஒரு சிங்கத்தைத் தேடிப்பிடித்து உன்னை நான் கடிக்கப்போகிறேன் என்றது.

உடனே சிங்கம் பயந்துபோய் ஈய்க்குத் தெரியாமல் ஒளிந்துகொண்டது.

ஈ தவளைக்குத் தெரியாமல் பறந்துவிட்டது.

தவளை எலிக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டது.

எலி பூனைக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டது.

பூனை நரிக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டது.

நரி சிங்கத்துக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டது.

எனவே எதுவும் எதையும் விழுங்கவில்லை; எல்லாம் தப்பித்துக் கொண்டன.

கே. ராணி,
இரண்டாம் படிவம், 'ஆ' பிரிவு.

தமிழ் நாடு

அறம் வளர்ப்பது தமிழ்நாடு
ஆன்றோர் பிறந்தது தமிழ்நாடு
இன்பம் அளிப்பது தமிழ்நாடு
ஈகை வளர்ப்பது தமிழ்நாடு
உழவர் மிக்கது தமிழ்நாடு
ஊக்கம் அளிப்பது தமிழ்நாடு
எழில் மிக்கது தமிழ்நாடு
ஏற்றம் உடையது தமிழ்நாடு
ஐயமற்றது தமிழ்நாடு
ஒற்றுமை உடையது தமிழ்நாடு
ஓவியத்தில் சிறந்தது தமிழ்நாடு
ஔவை பிறந்தது தமிழ்நாடு.

அ. சூடாமணி,
ஆறும் படிவம், 'உ' பிரிவு.

மூளைக்கு வேலை

1. தாயார் சமுத்திரம்; தந்தை சூரியன்; தரணியிலே என்னைத் தாங்காத வீடு இல்லை, நான் யார்?

* * * * * *

2. இரவெல்லாம் பூக்காடு; பகலெல்லாம் வெறுங்காடு. அது என்ன?

* * * * * *

3. மரகத மணியாய்ப் பிறந்து, பொன் மணியாய் வளர்ந்து முத்து மணியாய் வெடித்து, பால் மணியாய்ப் பக்குவ மாகித் தரணி காக்கும் தாயானேன்; நான் யார்?

* * * * * *

4. அருகையும் சருகையும் அமிர்த மாக்கும் இயந்திரம் எது?

வி. எஸ். சரஸ்வதி,
ஐந்தாம் படிவம், 'இ' பிரிவு.

* * * * * *

5. தட்டை தின்னும் தாள் தின்னும் என் சிவலைக்காளை; தண்ணீர் பட்டால் இறந்து விடும் என் சிவலைக்காளை. அது என்ன?

* * * * * *

6. அலையும் கடற் கரையிலே அழகு சதுர வயலிலே ஏருவுமில்லாமல் உழவுமில்லாமல் எட்டு நாளைக்கொரு வெள்ளாமை. அது என்ன?

ஜி. சபிதா,
நான்காம் படிவம், 'ஈ' பிரிவு.

* * * * * *

7. பல பேருக்கு ஒரு குடுமி. அது என்ன?

* * * * * *

8. குட்டைக் குளத்தில் ஒற்றைப் பாம்பும் மஞ்சள் குருவியும் மகிழ்ந்து வாழ்ந்தன. குளம் வற்றவே பாம்பு செத்தது; குருவி பறந்து புகைந்து போயிற்று. அது என்ன?

B. சம்பகேசுவரி,
நான்காம் படிவம், 'உ' பிரிவு.

(விடைகள்: 47-ம் பக்கம்)

आज का काम कल पर न छोडो

सतीश दूसरे दर्जे में पढता था। वह अपना पाठ शीघ्र याद कर लेता था। परंतु अपना काम ठीक समय पर नहीं करता था।

पाठशाला में छुट्टी आनेवाली थी। गुरु ने सब बालकों से कहा कि आज से तुम लोगों को छुट्टी है। इन दिनों में तुम्हें खेलने के लिए बहुत समय मिलेगा। परंतु दिन भर खेलना अच्छा नहीं होता। इसलिए तुम लोगों को कुछ काम करने के लिए दिया जाता है। जो बालक सबसे अच्छी तरह काम करेगा उसे इनाम दिया जाएगा।

इनाम का नाम सुनकर सतीश बहुत प्रसन्न हुआ और अपने मन में कहने लगा कि इस काम को मैं जी लगाकर करूँगा और इनाम लूँगा।

दूसरे दिन सतीश काम करने भूल गया और दिन-भर खेल में ही लगा रहा। जब रात हुई तो कहने लगा कि कोई बात नहीं, मैं उसे कल कर लूँगा। अभी तो छुट्टी के बहुत दिन पडे हैं।

इसी प्रकार कई दिन गुजर गये। एक दिन उसके मामाजी आये। उनके साथ चला गया। सतीश का मन खेल कूद में खूब लग गया। जब काम की याद आती तो वह कहता था कोई बात नहीं मैं उसे कल करूँगा। अभी छुट्टी के दिन बाकी हैं।

इस प्रकार छुट्टी के दिन बीतते चले गये और पाठशाला खुलने के लिए एक दिन बाकी रह गया। सतीश अपने घर आया और सोचने लगा कि कल पाठशाला जाना होगा, इसलिए काम करना चाहिए। परंतु रास्ता चलने की थकावट थी। इसलिए उसने सोचा कि अब थोडा आरम कर लूँ। काम कल सवेरे कर लूँगा।

सतीश सवेरे उठा। काम करने लगा, परंतु कुछ काम न कर सका। सतीश पाठशाला गया। सब बालकों ने अपना काम दिखाया। मोहन ने सबसे अच्छा काम किया था, इसलिए गुरु ने उसको बहुत बुरा भला कहा।

सतीश को बहुत दुख हुआ। उसने प्रतिज्ञा की कि अब से मैं अपना काम कल पर न छोडूँगा।

लडकियों ! तुम्हें आज का काम आज ही करना चाहिए।

श्री वल्ली,
II Form, 'D'.

स्त्री शिक्षा

ईश्वर की सृष्टि में स्त्री और पुरुष दोनों समान हैं। पुरुष बाहर जाकर कमाता है तो स्त्री घर का भार संभालती है। बडे बडे लोगों ने यह माना है कि स्त्री के बिना समाज में कुछ भी नहीं हो सकता है। भगवान के शरीर का आधा भाग स्त्री का है। इसलिए उनका नाम 'अर्धनारीश्वर' पडा है।

शिक्षा सबको आवश्यक है। चाहे वह स्त्री हो या पुरुष हो, अमीर हो या गरीब हो। शिक्षा मनुष्य को सभ्य बनाती है। कभी कभी उच्च पद भी दिलाती है। मनुष्य अपने संकट काल में से अपनी समझ और शिक्षा से अपने को बचा सकता है।

प्राचीन काल में अर्थात ऋुगवेद काल में स्त्रियाँ भी पुरुष के समान शिक्षा पाती थीं और पुरुषों के समान सभा समाज के कार्यों में भाग लेती थीं। मध्यकालीन अडचनों और राजनीतिक गडबडों के कारण स्त्री शिक्षा का प्रचार कम हो गया। आजकल स्त्री क्षिक्षा की उन्नति खूब हो रही है। शिक्षा के द्वार उनके लिए भी सभी शेत्रों में खुला है।

अगर स्त्री शिक्षित होती तो भारत के भावी बालकों को ठीक रास्ते पर ले जा सकती है। घर को और भी अच्छी तरह सँभाल सकती है। अपने पति के कार्यों में भी हाथ बंटा सकती है। शिक्षित स्त्रियों को नौकरी की खोज में दौडने की कोई जरूरत नहीं है। समय आने पर दूसरों का भार न बनकर अपनी जीविका को चलाने के लिए शिक्षा आवश्यक है।

केवल शिक्षा पाने की सुविधायें शहर में रहनेवाली स्त्रियों को ही प्राप्त होती है, लेकिन गाँव में रहनेवाली स्त्रियों को नहीं। शिक्षिताओं को चाहिए कि वे भी गाँव जाकर अपनी गँवार बहनों को शिक्षित बनानां है।

सब दृष्टि से देखें तो स्त्रियों को शिक्षित होनी चाहिए।

आर. चेल्लम्माल,
V Form, B.

मित्रता

बहुत पुराने समय की बात है। एक गाँव में दो लडके रहते थे। दोनों मित्र थे। एक का नाम राम था दूसरे का नाम गोपाल। दोनों हमउम्रवाले थे। उनकी शकल सूरत भी एक ही समान थी। वे एक साथ खाते पीतें, सोते जागते और खेलते कूदते थे। उनकी मित्रता इतनी गहरी थी एक दूसरे को छोडकर नहीं रह सकते थे। किसी को पता नहीं चलता था कौन राम और कौन गोपाल था।

दोनों बडे हुए। राम को राजा के महल में माली का काम मिला और गोपाल को एक दूकान में। दोनों एक ही घर में रहते थे और खुद खाना पकाकर खाते थे।

एक दिन की बात थी। राम बगीचे में काम कर करके थक गया। थकावट के कारण थोडी देर आराम करने के ख्याल से एक पेड के नीचे लेटा। अचानक राजा वहाँ आ पहुँचा और उन्होंने राम को एक पेड के नीचे सोता हुआ देखा। राजा की आँखें लाल लाल हो गयीं। महल वापस जाकर अपने दो सिपाहियों से राम को पकड लाने का हुकुम राजा ने दिया।

दोनों सिपाही राजा की आज्ञा को सिर आँखों पर चढकर राम की खोज में निकले। राम बगीचे में नहीं था, वह घर चला गया। दोनों मित्र बातें कर रहे थे कमरे के अंदर। गोपाल ने सिपाहियों को आते देखकर कहा, "आइये, बैठिये, आप लोग कौन हैं?" एक सिपाही ने जवाब दिया कि हम यहाँ बैठने थोडे ही आये हैं। हम राजाके सेवक हैं। उनका हुकुम है राम को पकड लाने का। जल्दी बताइये, राम कहाँ है? गोपाल ने झट कहा, "मैं ही राम हुँ। मुझे ले चलो, राजा के पास।" इतने में राम ने आकर कहा, "मैं ही राम हूँ। मुझे ले चलो।" गोपाल ने कहा, "नहीं, नहीं मैं ही राम हूँ। इस में जरा भी संदेह नहीं

है। मुझे ले चलो'। इस प्रकार राम और गोपाल दोनों अपने को राम बताते थे। सिफाहियों को बिलकुल पता नहीं चला कौन राम था और कौन गोपाल। उन्होंने आसपास के गाँववालों से पूछा कि कौन गोपाल और कौन राम था। क्योंकि दोनों की शकल सूरत एक ही थी।

आखिर राम और गोपाल राजा के सामने हाजिर किये गये। राजा को भी इन दोनों की शकल सूरत का फरक दिखाई नहीं पडा। यही नहीं, एक दूसरे के लिए सब कुछ त्याग करने को तैयार था। इनकी मित्रता को देखकर राजा ने राम और गोपाल को छोड देने का हुकुम ही नहीं दिया बल्कि अपने खजाने से उनको काफी धन भी दे दिया। धन पाकर दोनों मित्र खुशी खुशी अपने दिन काटने लगे।

सी. सान्ता,
VI Form, 'E'.

दशहरे दिनों स्त्रियाँ

मनुष्य की जरुरतों में अन्न वस्त्र की जरुरत अत्यंत आवष्यक चीजें हैं। अपनी जीवन रूपी नौका को चलाने के लिए मनुष्य को अनेको मार्ग निकालना पडता है। कई कष्टों को भोगना पडता है। इन कष्टों के बीच में उसका मन जरा आराम और मनोरंजन चाहता है।

ठीक वैसी ही बात स्त्रियों की है। स्त्री सदा घर के अंदर रहकर सारा काम खुद करके ऊब जाती है। पुरुषों के समान स्त्रियों को बाहर जाने का, समाज संघों में भाग लेने का अवसर थोडे ही मिलता है। वे त्योहारों के दिनों में बाहर जा सकती हैं। ऐसे त्योहारों में दशहरा एक मुख्य त्योहार है।

दशहरा दुर्गा पूजा के नाम से प्रसिद्ध है। इन दिनों में स्त्रियों को ज्यादा महत्व दिया जाता है। अधिकांश पुरुष स्त्रियों को अपने काबू में रखना चाहते हैं। आजकल पुरुषों को भी अपने चंगुल में रखनेवाली स्त्रियाँ की भी कमी नहीं है। स्त्रियों को अपनी कीमति साडियों, गहनों को प्रदर्शन करने का और गप्पे मारने का एक अच्छा अवसर है दशहरा!

दक्षिण भारत में दशहरे के दिन अपने अपने घरों में मिट्टी की मूर्तियों के प्रदर्शनी होती है। इस प्रदर्शन में देवी, देवता, पशु-पक्षी, पेड पौधे, मिट्टी के बने केले, आम, कटहल, अनार, अंगूर, नारियल आदि सीढियाँ बनाकर रखते हैं। इसके अलवा बगीचे, पंचवर्षीय योजना, रेलवे स्टेशन, स्कूल, गाँव के दृश्यों को सजाते हैं।

इस दशहरे में इन प्रदर्शनों को देखने के लिए अपने परिचित, बंधु-मित्रों को बुलाते हैं और ताम्बूलादि चीज़ें दी जाती हैं। स्त्रियाँ उन दिनों से खूब लाभ उठती हैं।

मानव जीवन में सुख देनेवाले साधनों में कला एक है। कला एक ऐसी वस्तु है जो सभी को अपनी ओर आकर्षित करनेवाली है। दशहरे के समय भारतवाले संगीत कला, चित्र कला, नाटय, नाटकों का प्रदर्शन करते हैं। ऐसे सौंदर्यों से मानव जोवन का मन क्यों नाच न उठेगा? नास्तिक भी आस्तिक बन जाएगा। क्या है, दशहरा का महत्व!

'फूल'

श्रीः

महाकविः श्रीभारविः

"भारवेरर्थगौरवं" इति सुप्रथया अलंकृतस्य "किरातार्जुनीय" नामकस्य महाकाव्यस्य प्रणेतारं महाकविमेनमुद्दिश्य कथा काचन कर्णपरम्परया अनुश्रुयते।

महेन्द्रपल्लवनाम्नो महाराजस्य समकालीनोऽयं महाकविः कंचित् कालं तमेव विचित्रचित्तमाश्रित्य कांचीपुरे न्यवसत्। अनन्तरं चालुक्य वंशोत्पन्नस्य कस्यचित् राज्ञः सभां अलंचकारेति ज्ञायते।

महाकवेरस्य तनयः कश्चित् सर्वात्मनापितरमनुजातः महापण्डितश्च आसीत्। सर्वोऽपि लोकः तस्य पाण्डित्ये कविताचातुर्यां च परं विस्मयमापन्नः तं प्रशशंस। परं तु भारविः पिता केवलं न तं तथा सर्वात्मना अभ्यनन्दत्। यदा यदा तं पश्यति तदा तदा तमवेक्ष्य "कुमार! एतावता पाण्डित्येन इयत्या च कविताचातुर्या मा विस्मयं आप्नुहि। इतोऽप्यधिगन्तव्यं अन्यत् बहु विद्यते। विद्यायाः नान्तोऽस्ति कश्चित्। अतः इतोऽप्यधिकं प्रयत्नमास्थाय अधिकाधिगमे प्रयतस्व" इति वदन्नेव आसीत्। कुमारस्तु विस्मितः "किमेवं मां असकृत् तातपादाः उद्बोधयन्ति? सर्वोऽयं लोकः मम पाण्डित्यं कवितां च अंगीकृत्य मां अभिष्टौति। तातपादास्तु न केवलं न प्रशंसन्ति, किंतु न पर्याप्तं मे पाण्डित्यं इति च अभिप्रयन्ति। किं नामास्ति तदन्यत् बहु, यन्मया नाधीतं, इतोऽध्येयं च" इति चिन्तया महान्तं कालं अयापयत्। अन्ते च तस्य एवं विपरीता मतिरुत्पन्ना। यथा 'सर्वथा तातस्य मयि ईर्ष्या संजाता। ईर्ष्याभिभूतोऽयं मां एवमसकृत् ब्रवीति। तस्य पाण्डित्यं न ममेव, कविताचातुरी च न तादृशी या मयि विलसति। यावदसौ जीवति तावत् "महाकविरिति" लोके जायमानां मम प्रथां नानुमंस्यते। ईर्ष्याभिभूतस्य च कुतो वात्सल्यं, का च वा न्याय्या धीः? ईर्ष्या हि जनं जात्यन्धं करोति। तत् किं कुर्याम्? सर्वथा हन्तव्योऽयं दुरात्मा ईर्ष्यान्धः" इति आलोच्य समयं प्रतीक्षमाणस्तस्थौ।

अथ कदाचित् रात्रौ भारविः भोजनोन्मुखः पुरतः पत्रं प्रसार्य आसने उपाविशत्। तदा तत्पत्नी अन्नं व्यंजनादिकं च तस्मै परिवेषयन्ती, सन्तुष्टं भर्तारं विज्ञाय तमेवं अवादीत्:—

"स्वामिन्! सर्वोऽयं लोकः अस्मत्कुमारं पण्डितं, महाकविं च शंसति। भवांस्तु मन्ये तन्नांगीकरोति। किमिदम्"? इति।

गृहिण्या वचनमेतदाकर्ण्य महाकविः भारविः सस्मितं तामवलोक्य अवादीत् "प्रिये! सम्यक् पृष्टं त्वया। अवहिता शृणु। अस्मत्तनयः महाकविः महापण्डितः, मेधावी, प्रतिभानवान् च। अद्य लोके नास्ति तत्सदृशः महाकविः पण्डितो वा। अहमपि कवितायां, पाण्डित्ये च न तेन तुल्यो भवामि। मत्तोपि प्रकृष्टः कविः, पण्डितश्च भवति अस्मत्तनयः। अत्र न कापि संशीतिः। परंतु एवं 'महापण्डितोऽहं" इति यदि सः मन्येत तदा तं दर्पः समाविशेत्। दर्पान्धश्च पुरुषः मूर्खो भवति। मूर्खश्च जनः नीचतां याति। "मास्मत्तनयो नीचो भवतु" इत्यभिप्रेत्यैव तस्य दर्पावकाशं अददन् असकृत्तम् दृष्ट्वा "त्वयाधीतं अल्पमेव, अध्येतव्यमस्ति बहु" इति वदन्नस्मि। अतः चिन्तां त्यज। सुपुत्रवती भवती भाग्यवतीनां धुरि गण्यसे" इति।

एतस्मिन्नन्तरे स्वयमेव कविकुमारोऽपि पितृजिघांसया महतीं शिलामेकामादाय 'गृहस्य उपरितले निषण्णः पितुः शिरसि शिलापातनाय समयं प्रतीक्षमाणस्तिष्ठन्, अद्य भोजनावसरे पित्रोः संवादमेनं समग्रं श्रुत्वा, भृशं दुःखितः पितुर्हृदयं जानन् नितरां पश्चात्तापपीडितः अभवत्। सद्य एव अवतीर्य शिलां पितुरग्रे निक्षिप्य तस्य पादयोः दण्डवत् प्रणनाम। विस्मितेन पित्रा पृष्टः सर्वं स्वोद्यमं तस्मै समाचख्यौ। बहुधा च पितरं क्षमापयामास। गम्भीरस्वभावः तत्पिता च तदा तमवेक्ष्य श्लोकमिमं उदाजहार :—

"सहसा विदधीत न क्रियां अविवेकः परमापदां पदम्।
वृणते हि विमृश्यकारिणं गुणलुब्धाः स्वयमेव सम्पदः॥"

श्लोकमिमं श्रुत्वा कुमारः गतव्यथः पितरि पूर्वतोऽप्यधिकां भक्तिं स्नेहं च समाबबन्ध॥

इत्थम्
बि. वृन्दा,
षष्ठकक्ष्या, 'B'.

श्रीः

परोपकारः

देशीयकन्यापठनालयेहं
गीर्वाणभाषां पठितुं प्रवृत्ता।
इदं कथालेखनमद्य कृत्वा
समर्पयामीह च पण्डिताग्रे ॥

भोः !

भगवत्पादारविन्दमकरन्दधूलिभिः शुद्धीकृते अस्मिन् महीतले अनेके महान्तः पण्डिताश्च आसन्। पण्डित-परिगणनारम्भ एव कविचक्रवर्ती कालिदासः अग्रपदं अलङ्करोति। अहो पण्डितैरेव मण्डितेयं पुरा भूमिः। अस्यां भुवि सर्वेषां अस्मदादीनां कार्येषु अतिमुख्यः परो प्रकारः।

अस्योपकारस्य कारणत्वेन अभिमता परोपकारचिन्ता। तथ्यमेव ! शास्त्रज्ञाः एवमेव वदन्ति 'जानाति इच्छति यतते' इति। आदौ वस्त्वेकं जानाति, तदेव ज्ञानं, तदनन्तरं तत्प्राप्तीच्छा भवति,तदिच्छति सः। सैव प्रयत्नस्य कारणत्वेन तिष्ठति, यतति च तत्प्राप्तये सः।

सोऽयं उपकारः मनोवाक्कायैः बहुधा बिभज्यते। मितभाषणमेव प्रथमः। सम्भाषणे माधुर्यं भाव्यम्। शिथिलवस्त्रधारी कश्चन याचकः द्रव्यलाभाशया किंचन धनिकगृहं गच्छति। इमं पश्यन्नेव अपश्यन् भवति स धनिकः। अथवा एवं हुङ्काररूपसम्भावनां कृत्वा प्रेषयति। 'कुत्र आगतः ? किं कार्यमिह ? अद्य किमपि नास्ति पश्चात् पश्यामस्तावत् गच्छ' इति। अहो ! तन्मनः शिलारूपं उत अयः ? तदेव वदति कालिदासः—

"याच्ञा मोघा वरं अधिगुणे नाधमे लब्धकामा" इति। समीचीनमेव इदं वचनम्।

श्रीवैष्णवसम्प्रदाये द्रविडवेदोपकारिणां नित्यशूरिणां श्रेण्यां गोदाऽपि काचन। सा "तिरुप्पावै" नामकं त्रिदश-गाथामिळितं प्रबन्धमेकं अकरोत। माधुर्यभरितः सोऽयं प्रबन्धः भक्तिप्रकाशकश्च। भगवत्प्रापणमार्गप्रदर्शी। नारीणां व्रतानुष्ठानविधिबोधकः। "तेन विना तृणमपि न चलती" ति तत्वमपि प्रकटीकरोति। प्रबन्धेऽस्मिन् 'वैयत्तु' इति गाथा परोपकारचिन्तां सूचयति।

कम्बरामयणनामकद्राविडप्रबन्धेपि हनुमतः लङ्कागमन-समये मैनाकरामदूतसंभाषणे मैनाकं प्रति परोपकारस्वरूपं तद्भेदं च प्रदर्शयति।

अधुनापि भारतदेशे 'विनोबा' नामकः कश्चन विरक्तः सांयात्रिकः तत्र तत्र पादयात्रया गत्वा भूमिं अपेक्षते जनेभ्यः। किंकारणं अस्य ? । दरिद्राणां दारिद्र्यदूरीकरणार्थमेव। अतः सर्वेषां परोपकार चिन्ता आवश्यकी। सोऽयमुपकारः त्रिकरणमूलको भवितव्यः।

इत्थं

एम्. जी. जयलक्ष्मी,
पंचमकक्ष्या, 'B'.

प्रहेलिकाः

1. विवाहकाले किं वाच्यं ? को धर्मो ? विष्णुवाहनम् ?। अबद्धं वा सुबद्धं वा, कुन्तीपुत्रो, दिनायकः ॥
(यथासंख्यं प्रश्नोत्तराणि)

2. का सारवती भूमिः ? कं बलवन्तं न बाधते शीतः ? ।
(प्रश्नः)
कासारवती भूमिः कंबलवन्तं न बाधते शीतः ॥
(उत्तरम्)

3. विराटनगरे रम्ये कीचकादुपकीचकम्।
अत्र क्रियापदं वक्तुः हैमं दास्यामि कङ्कणम् ॥

विः, आट. इति पदविभागे }
क्रियापदोपलब्धिः। }

इत्थम्
वि. राजलक्ष्मी,
चतुर्थकक्ष्या, 'B'.

THE UNIVERSITY TUTORIAL COLLEGE

(Sama Rao School Premises)

37, SINGARACHARI STREET, TRIPLICANE, MADRAS.

(ESTABLISHED 1939)

This college coaches students for the following Examinations to be held in MARCH 1957.

1. S.S.L.C. 2. Matriculation 3. Intermediate 4. Preuniversity

Special Rapid Revision Classes in all the subjects for the benefit of the S. S. L. C. & Preuniversity Pupils taking the March 1957 Examination begin from 1-12-'56.

Separate Classes for girl pupils & **All subjects taught in English or Tamil**

Efficient coaching and individual attention guaranteed.

Classes: Morning & Evening Hours

Join at once and make sure of your success in the ensuing Exams.

For further Particulars apply to: DIRECTOR

"SHARMAN"

For Quality & Service,
Sports Goods for all Sports,
Playground Apparatus,
Table Tennies Equipments,
Track & Field Equipment, Books & Charts,
Geometrical Models, Blackboard Instruments,
Maps & Globes.

SHARMAN & CO.,

SPORTS SPECIALISTS,

MOUNT ROAD, MADRAS.

VARIETY HALL ROAD, COIMBATORE.

Telegrams: "ADVANCE" Telephone: 71034

SCIENTIFIC ADVANCE COMPANY

87, APPARSWAMI KOIL STREET,

MYLAPORE, MADRAS-4.

Post Box 616

Specialists in

Physical, Chemical and

Biological Apparatus and

Pure Chemicals and

Suppliers to the

NATIONAL HIGH SCHOOL FOR GIRLS & BOYS, TRIPLICANE.

Other Schools, Colleges, Universities,

Industrial and Research Laboratories

Throughout South India.

Printed by C. Krishnamurthi at the Ramakrishna Printing Works, 19/B, Woods Road, Madras-2. and Published by Sri N. K. Tirumalachariar at the National High School (Girls), Triplicane.
Editor: K. S. SUNDARI.

உ

திருவல்லிக்கேணி

தேசீய பெண்கள் கலாசாலை

——:o:——

மங்களம் பொங்குகவே!

சங்கமும் திகிரியும் தாங்கிய பார்த்த
சாரதி யருளால் பாரினி லெங்கும்
மங்களம் பொங்குகவே!

மாநிலம் மகிழ, மழைவளம் பொழிக!
ஆனிரை யருளோடு அறநெறி நிறைக!

பானிற மனமொடு பாவையர் பயிலும்,
தேனினும் இனியநம் தேசீய சாலையில்
மங்களம் பொங்குகவே!

மங்களம்

——:x:——

JL
145435
T2, 47 m2111. T, N56
N56. 7.1
600 009